# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்


மலர் : 9 இதழ் :5 பிப்ரவரி : 2025 ரூ.20/-
Volume : 9 Issue : 5 February : 2025 Rs.20/-

## தமிழ் தாத்தா உ.வே. சுவாமிநாத ஐயர்



தோற்றம்
19.02.1855

மறைவு
28.04.1942



SHRI MAHA MERU MANDALI TRUST
81/1, Mannappa Street, Kottur, Chennai - 600 085.







2014-ம் ஆண்டு முதல் வேதபாரதியின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஸ்ரீ மஹாமேரு மண்டலி குருஜி அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறோம். முதன் முதலில் வேதபாரதி செய்திகள் மாத இதழ் வண்ணக் கலரில் வர வேண்டும் என்றும், அதிக பக்கங்களுடன், இதழ் அதிக உறுப்பினர்களுக்கும் சென்றுசேர வேண்டும் என்ற குருஜியின் ஸங்கல்பம் நிறைவேறி 11 ஆண்டுகளாக தொடர்கிறது. வேதபாரதியின் வளர்ச்சிக்கும் சேவைக்கும், ஸ்ரீமஹா மேரு மண்டலி குருஜியின் ஆசீர்வாதங்கள் என்றும் வேண்டும்.

என்றும் பணிவுடன்
வேதபாரதி குழுவினர்

# வேதபாரதி
## செய்திகள்




**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 67

**ஆ யன்மின்த்[1]ஸப்[1]த[1] பே[1]ரவ:|**

**மேஹந்தி[1]ப[3]ஹூலாகு[3]ம்ச்ரியம் |**
**ப[3]ஹ்வச்வாமிந்த்[3]ர கோ[3]மதீ[1]ம் ||**

**- தைத்திரீய ஆரண்யகம் 3.11.4**

**பொருள் :** *எந்த ஸூர்யனிடத்தில் மழையைப் பொழியும் ஏழு ஒளிக்கற்றைகள் விளங்குகின்றனவோ அவைகள் மழையாகப் பொழிந்து பெருஞ்செல்வமாகிய பயிர் வளர்ச்சியை அருளட்டும். ஓ இந்த்ர வடிவிலாகிய இறைவா! வாழ்க்கையை வளப்படுத்தும் குதிரைகளுடனும் பசுமாடுகளுடனும் செல்வத்தை வழங்கி அருள்வீராக!*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 9 இதழ்: 5

*அச்சிட்டு வெளியிடுபவர்*
*பதிப்பாளர், ஆசிரியர்*

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 70101 88571

*அச்சகம்*
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
*39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,*
*சென்னை - 600 010.*

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |


வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**

*நிர்வாக முகவரி:*
*எண்.31, சேஷாத்திரிபுரம்*
*1வது மெயின் ரோடு, பேபி நகர்,*
*வேளச்சேரி, சென்னை - 600 042.*
**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

*ஸ்ரீ குருப்யோ நம:*
*ஜய குருதேவ தத்த*
*நமோ குருவே வாஸுதேவாய*

# பரமஹம்ஸ பரிவ்ராஜக ஸ்ரீ வாஸுதேவாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் (தேம்பே ஸ்வாமிகள்)



ப.ப. ஸ்ரீ வாஸுதேவாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் (தேம்ப ஸ்வாமிகள்), கணேஷ் பட் மற்றும் ரமா பாய் என்பவர்களுக்கு 1854-ஆம் ஆண்டு ஸ்ரவண க்ருஷ்ண பக்ஷ பஞ்சமி திதி அன்று பிறந்தார். அவருடைய பெற்றோர் ஸ்ரீ தத்தாத்ரேயரின் அத்யந்த பக்தர்கள். ஸ்ரீ தத்தர் அவர்களது கனவில் தோன்றி, அவரே கணேஷ் பட் மற்றும் ரமா பாய்க்கு மகனாக பிறப்பதாக கூறினார். எனவே தேம்பே ஸ்வாமிகள், ஸ்ரீ தத்தரின் அவதாரம் என்றேக ருதப்படுகிறார்.

அவரது ஏழாவது வயதில் அவருக்கு உபநயன ஸம்ஸ்காரம் நடைபெற்றது. அதன் பின் அவர் வேத அத்யயணம், ஜோதிடம், ஸமஸ்க்ருதம் மற்றும் யோகா பயின்றார். அவருடைய ஒருங்கிணைந்த மனதாலும், ஸ்ரத்தையாலும் அவருக்கு மிக விரைவில் மந்த்ர ஸித்தி உண்டாயிற்று. இதனைக்கொண்டு அவர் பலருக்கு நன்மைகள் செய்தார். அவருடைய 21-ம் வயதில், அவருக்கு பயோ என்றபெண்ணுடன் திருமணம் ஆயிற்று. அவருடைய மனைவியுடன் சில காலம் க்ருஹஸ்தராய் வாழ்ந்தார். அவரது மனைவி 1891ஆம்

ஆண்டு காலமானார். அதன் பின்னர், அவர் ஸந்யாஸம் பூண்டார்.

தனது ஸந்யாஸ வாழ்க்கையில், ஸநாதன தர்மத்தையும் பக்தி மார்க்கத்தையும் பரப்ப நம் பாரத தேஸம் முழுவதும் யாத்ரை மேற்கொண்டார். அவரது வழிகாட்டுதலினால் ஏராளமான மக்கள் தங்கள் வழிகளை சீர்திருத்திக்கொண்டு வேத பாதையை பின்பற்றதொடங்கினர். அவர் ஸாஸ்த்ர விதிகளுக்கு சிறிதும் விலகாமல் தனது ஸந்யாஸ தர்மத்தை கடைப்பிடித்தார். பல இடங்களில் ஶ்ரீ தத்த ப்ரதிஷ்டை செய்து, பக்தி வளர்ச்சிக்கு வித்திட்டார். இவரே நமக்கு திகம்பர மஹாமந்த்ரத்தை அருளினார். எங்கெங்கு சாதுர்மாஸ்யம் அவர் மேற்கொண்டாரோ, அப்பகுதி மக்களிடையே ஒரு ஆன்மீக தாக்கத்தை ஏற்படுத்தினார். ஒரே ஒருமுறை தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் உள்ள ஸந்த்யா மண்டபம் என்னும் இடத்தில் அவர் சாதுர்மாஸ்யம் மேற்கொண்டிருக்கிறார். இன்றும் அவரை தரிஸித்த பாக்யம் பெற்றோரின் வம்ஸத்தை சேர்ந்தவர்கள், அங்கே அவரின் ஜயந்தி ஆராதனை முதலியவைகளை விமர்சையாக கொண்டாடுகின்றனர். அவரது உடமைகள் வெறும் 4 கோவணங்கள், 2 மேல் வஸ்த்ரங்கள், தண்டம் – கமண்டலம், தேவைப்படும் போது ஒரு கம்பளித் துணி, புஸ்தகங்கள், வழிபாட்டிற்கு தேவையான ஸாமக்ரியைகள் அடங்கிய பெட்டி, இரண்டு தத்த மூர்த்தங்கள், தண்ணீர் எடுக்க கயிறு மட்டும் தான்.

அவர் தன் வாழ்க்கையில் 19க்கும் மேற்பட்ட புஸ்தகங்களை எழுதியுள்ளார் பல ஸ்லோகங்களையும் இயற்றியுள்ளார்.

அவர் 1914ஆம் ஆண்டு ஜ்யேஷ்ட மாதம் அமாவாஸை அன்று சமாதி அடைந்தார். அவருடைய அதிஷ்டானம் இன்றும் நர்மதா தீரத்தில் கருடேஷ்வர் என்னும் க்ஷேத்திரத்தில் உள்ளது.

## ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் தக்ஷின பாரத் பிரசார கைங்கர்ய ஸபை

ஸ்ரீ வாஸுதேவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் (ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் / ஸ்ரீ ஸ்வாமி மஹாராஜ் என்றும் அறியப்பட்ட) பல ஸ்தோத்ரங்களும், உபதேஸ க்ரந்தங்களும் இயற்றியுள்ளார்.

அவர் இயற்றிய "ஸ்ரீ குரு சரித்திரம்" என்றபடைப்பின் மூலம் தான் இன்று நாம் ஸ்ரீ தத்த தேவர், ஸ்ரீபாத வல்லப மற்றும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸரஸ்வதி ஸ்வாமி (அவதார த்ரயம்) சரித்திரங்களை எளிய ஸமஸ்கிருதத்தில் பாராயண கிரந்தமாகக் கொண்டுள்ளோம். மந்திரங்கள் பொதிந்த பல ஸ்தோத்திரங்களை எழுதியுள்ளார். ஒரு கிரந்தாசிரியர் என்பதைவிட அவர் தனது குரு தத்த பக்தி மற்றும் வைராக்கிய நிஷ்டையினால் தனித்து நின்றார்.

அவரது படைப்புகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதும், அவரது மகத்தான சேவையை மக்களுக்கு நினைவூட்டுவதும் இந்த சபாவின் நோக்கமாகும். ஸபா தனது யூ—இல் வாரா வாராம் ஸ்ரீ ஸ்வாமி மஹராஜின் ஸ்தோத்திர வீடியோக்கள் வெளியிடுகிறது.

நமது ஸபையின் ப்ரச்சார அங்கமாக இங்கே, ஸ்ரீ ஸ்வாமி மஹராஜ் இயற்றிய கோர கஷ்ட நிவாரண ஸ்தோத்ரம் ஸமர்ப்பிக்க படுகிறது.

ஸ்ரீ ஸ்வாமி மஹராஜ், ஸ்ரீ பாத வல்லபரின் (ஸ்ரீ தத்தரின் அவதாரம்) க்ஷேத்திரத்தில், பக்தர்கள் வேண்டுகோளுக்கிணங்க இந்த "கோர கஷ்ட நிவாரண" ஸ்துதியை இயற்றியிருக்கிறார். மந்திரம் பொதிந்த, இந்த ஸ்துதியை இன்றளவும் பாராயணம் செய்பவர்கள், கோரமான கஷ்டங்களில் நின்றும் விடுபட்டு மன ஸாந்தி அடைவது கண்கூடு.

நமோ குரவே வாஸுதேவாய
ஜய குருவே தத்த

தொடரும்...

## உங்கள் சிந்தனைக்கு....

## 17. கஷ்டமும் – சந்தோஷமும்

மனிதனிடம் இருக்கும் ஆச்சரியப்பட வைக்கும் ஒரு விஷயம் என்னவென்றால், அவனுக்கு ஒரு கஷ்டம் அல்லது துன்பம் வந்தால் "எனக்கு மட்டும் ஏன் இத்தனை கஷ்டம்'' என்னை ஆண்டவன் ஏன் இப்படி சோதிக்கின்றான்" என்பான். ஆனால் அவனுக்கே ஒரு நல்ல ஐ.டி. கம்பெனியில் வேலை கிடைத்து நல்ல வீடு, நகை, நல்ல கார், ஹீரோ ஹோண்டா பைக், ஐ போன், வங்கியில் பணம், வெளிநாட்டுப் பயணம் எல்லாம் அமைந்தால் "எனக்கு ஏன் இந்த வளர்ச்சி?, இவற்றை எல்லாம் ஆண்டவன் எனக்கு ஏன் கொடுக்கிறான்?'' என்று என்றாவது கேட்பானா?

ஆண்டவன் நம்மை சோதிப்பதெல்லாம் இல்லை. அது ஒரு தவறான நம்பிக்கை. சோதனை வேளைகளில் ஆண்டவன் நம்மால் காணமுடியாதவாறு நம்மோடுதான் இருக்கிறார். அவர் நமக்காக நம் கர்ம விதியை சரிவர நடத்தி வைக்கிறார். சுகத்தை மட்டும் விரும்பி ஏற்கிற மனிதன், கஷ்டம் வரும்போது அதை "பொறுத்துக் கொள்ள மாட்டேன்'' என்று சொன்னால், அவன் ஆண்டவனையோ, இயற்கையையோ புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

வைரம் பட்டை தீட்டப்படாவிட்டால் பளபளப்பாகாது. மின்னாது, தங்கம் நெருப்பில் புடம் போடாமல் சொக்கத் தங்கமாகாது. நல்லவர்கள் சோதனைக்கு உள்ளாவார்கள். ஆனால் ஆண்டவன் அவர்களை வேதனைப்பட வைக்கமாட்டான்.

பிறந்ததிலிருந்து கடைசிவரை கஷ்டம் மட்டுமே அனுபவித்து செத்தவர்கள் இந்த உலகத்தில் யாரும் கிடையாது. அதே போல பிறந்தது முதல் இறுதிவரை

சந்தோஷத்துடனேயே வாழ்ந்து மடிந்தவர்களும் யாரும் கிடையாது.

எனவே நல்ல சிந்தனையுடன் ஆண்டவனை வணங்கி, அவன் நாமத்தை ஜபித்து, அவரிடம் சரண் அடைந்தால், நாம் நமது சோதனைகளையும், கர்ம வினைகளையும் பயமின்றி கடந்து சாதனையாக்கலாம்.

கடந்த காலத்தை கலக்கமில்லாமல் உணர்ந்து கொள்ளுங்கள்...

நிகழ் காலத்தை ஊக்கத்துடன் அணுகுங்கள்..

வருங் காலத்தை தைரியமாக எதிர்கொள்ளுங்கள். ஆண்டவனை நம்புங்கள். அவர் யாரையும் கைவிடமாட்டார்.

**D. சூரியநாராயணன்**

## ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஒப்புவித்தல் போட்டி ஊரப்பாக்கம்

கடந்த மாதம் 22.01.2025 அன்று மறைமலை நகர் பகுதியில் மறைமலை நகர் பிராமண சங்கம் மற்றும் வேதபாரதி ஊரப்பாக்கம் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட ஆத்திசூடி கொன்றைவேந்தன் ஒப்புவித்தல் போட்டியானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு அவர்களை உற்சாகப்படுத்தும் விதமாக பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் 60க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதில் வேதபாரதி அமைப்பின் சார்பாக செயலாளர் திரு.வெங்கட்ராமன் ஜி மற்றும் ஊரப்பாக்கம் பொறுப்பாளர்களும், மறைமலை நகர் பிராமண சங்கம் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

# அட்டைப்பட விளக்கம்

## தமிழ் தாத்தா உ.வே. சுவாமிநாத ஐயர்

## 19.02.1855 – 28.04.1942

**"உ.வே.சா" (உத்தமதானபுரம் – வேங்கட்ராமன் – சாமிநாதன்)** என்று அழைக்கப்படும் **"உ.வே.சாமிநாத ஐயர்''** அவர்கள் உழைத்திராவிட்டால் தமிழ் உலகத்திற்கு **"சிலப்பதிகாரம்''** தெரியாமலே போயிருக்கும். **"அகநானூறு" "புறநானூறு''** இரண்டிற்கும் வேறுபாடு தெரிந்திருக்காது. **"மணிமேகலை"** மண்ணோடு மறைந்திருக்கும். இப்படி நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றிப் பதிப்பித்துத் தந்தவர் என்றபெருமை உடையவர் உ.வே.சா. அவர்கள்.

உ.வே.சா. அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தின் **"சூரியமூலை"** என்ற ஊரில் வேங்கடேச ஐயர், சரசுவதி அம்மாள் தம்பதியருக்கு மகனாக ஆனந்த வருடம் மாசி மாதம் 9ஆம் தேதி திங்கட்கிழமை, அதாவது **19.02.1855-ல்** பிறந்தார். ஆனால் அவர் வளர்ந்தது எல்லாம் அவருடைய தந்தைவழி ஊரான **"உத்தமதானபுரம்"** என்னும் ஊரில்தான்.

சிறு வயதில் இவருடைய குடும்பம் தீராத வறுமையில் வாடினாலும் இவருடைய தந்தையின் முயற்சியால் சிறுவயது கல்வியையும், இசைக் கல்வியையும் தனது சொந்த ஊரான உத்தமதானபுரத்தில் ஆசிரியர்களிடம் கற்றார். அவருடைய 13ஆவது வயதில் 1868-ல் அவருக்கு திருமணம் நடந்தது. மனைவி பெயர் மதுராம்பாள், வயது எட்டு.

பின்னர் தன் 17ஆவது வயதில் நாகப்பட்டிணம் திருவாவடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த திரு.மீனாட்சி சுந்தரம் பிள்ளை

அவர்களிடம் 5 ஆண்டுகாலம் பயின்று தமிழ் அறிஞரானார். அதன் பின் கும்பகோணத்தில் கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றி பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்தார்.

**“தமிழ் தாத்தா”** என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் இவர் மட்டும் இல்லையென்றால் ஏட்டுச் சுவடிகளில் இருந்த மிக மிக அரிய தமிழ் நூல்கள் எல்லாம் அச்சுக்கு வராமலே போயிருக்கும்.

அக்காலத்தில் ஏராளமான தமிழ் இலக்கியங்கள் எல்லாம் ஓலைச்சுவடி வடிவில்தான் இருந்தன. அவற்றைபடியெடுப்பது சிரமம் என்பதால் ஒவ்வொரு இலக்கியத்திலும் ஒரு படிதான் இருக்கும். அவற்றையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து அச்சாக வெளியிட்டாலொழிய அவற்றை தமிழுலகம் இழந்து விடும் என்று கலங்கினார் உ.வே.சா.

தமிழ் நாட்டின் பல பகுதிகளில் சிதறிக் கிடந்த பழங்கால இலக்கண, இலக்கிய ஓலைச் சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைமுறைப்படுத்தி பதிப்பிக்கும் அரிய பணியை தம் தலையாய பணியாக அவர் மேற்கொண்டார். அதற்காக அவர் பட்ட சிரமங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல.

ஒரு முறை திருக்குறள் உரையுடன் கூடிய நூல் ஒருவரிடம் இருப்பதை அறிந்து அதை பெறுவதற்காக பல மைல்கள் நடந்து சென்றுள்ளார்.

கிடைத்தற்கரிய ஏடுகளின் அருமை தெரியாமல் அவை எப்படியெல்லாம் அழிக்கப்பட்டு வந்தன என்பதை **“என் சரித்திரம்”** என்ற புத்தகத்தில் அவர் ஆதங்கத்தோடு விவரித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் **“கரிவலம் வந்த நல்லூர்”** என்ற ஊரில் வசித்துவந்த **“வரகுண பாண்டியர்”** என்பவர் வைத்திருந்த ஏடுகள் அந்த ஊர் ஆலயத்தில்

வைத்திருப்பதாக கேள்விப்பட்டு அங்கு சென்று அவற்றைப் பற்றி விசாரித்துள்ளார். உ.வே.சா. அந்த கோவிலில் இருந்த ஒரு அறங்காவலர் “ஐயா குப்பை கூளங்களாக கிடந்த சுவடிகளை என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தோம். அப்போது “பழைய ஏடுகளையெல்லாம் கண்ட இடத்தில் போடக்கூடாது” என்று கூறியதால், அவற்றை நெய்யில் நனைத்து ஒரு பெரிய குழியில் அக்னி வளர்த்து அதில் போட்டுவிட்டோம்’’ என்று கூறினார் அந்த அறங்காவலர். இதைக்கேட்டு அதிர்ந்து போன உ.வே.சா அவர்கள் இப்படி எங்காவது ஆகமம் சொல்லுமா? அப்படி சொன்னால் அந்த ஆகமத்தையல்லவா முதலில் எரிக்கவேண்டும்?’’ என்றார்.

மற்றொரு ஊரில் இருந்த பழைய சுவடிகளை தேடிச் சென்ற போது அவருக்கு கிடைத்த பதில் “ஐயா எல்லாச் சுவடிகளும் நல்லா மக்கிபோச்சு, பல சுவடிகள் ஒடிஞ்சி போச்சி. அதுல என்ன எழுதியிருக்குன்னு எங்களுக்கு படிக்க தெரியல. சும்மா வீணா இடத்தை அடைச்சிகிட்டு இருக்கேன்னு சொல்லி எல்லா சுவடிகளையும் ஒரு கோணிப்பையில் கட்டி ஆடி பதினெட்டன்னைக்கு ஆத்தோடு விட்டுட்டோம்’’ என்று கூறினாராம்.

இதுபோன்ற மூடச் செயல்களால் எத்தனை கருவூலங்கள், கரைந்தும், செந்தீயில் பொசுங்கியும் போயிருக்கும் என்று எண்ணி, எண்ணி உயிர் உருகி கலங்கினார் தமிழ் தாத்தா உ.வே.சா.

இவர் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித்துள்ளார்.

இவருடைய தமிழ் பணியை பாராட்டிய சென்னை பல்கலைக்கழகம் 21.03.1931 அன்று இவருக்கு

**"மஹாமஹோபாத்தியாய"** என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

திரு உ.வே.சா அவர்கள் திருக்கழுக்குன்றத்தில் இருந்தபோது அவருக்கு கடுமையான காய்ச்சல் உண்டாயிற்று. அவருடைய குமாரரும், அவருடைய மாணவரான திரு. கி.வா.ஜகந்நாதனும் அருகில் இருக்கவில்லை. மகனுக்கு தந்தி அடித்தார்கள். ஆனால் அவர் வருவதற்குள் அவர் தன்னுடைய 87வது வயதில் 28.04.1942 ஞாயிற்றுக்கிழமை இறைவன் திருவடி அடைந்தார்.

உத்தமதானபுரத்தில் உ.வே.சா. வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவு இல்லமாக்கப்பட்டுள்ளது.

05.07.1942-ல் இவர் பெயரால் சென்னை பெசன்ட் நகரில் "டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம்" அமைக்கப்பட்டு இன்று தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

07.03.1948-ல் உ.வே.சா. பணியாற்றி ஓய்வு பெற்ற சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தின் வாயிலில் அவரது தமிழ்ப்பணியைப் போற்றும் வகையில் அவருடைய உருவச்சிலை நாட்டப்பட்டது.

18.02.2006-ல் இந்திய அரசால் இவரது நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

தன்னலம் கருதாது தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் தமிழுக்காக செலவிட்ட நேரங்களையும், தேடல்களையும் எண்ணிப் பார்க்கும்போது அவருக்கு எத்தனை பட்டங்கள் கொடுத்தாலும் போதாது. அவருடைய தமிழ் தொண்டிற்கு நாம் ஒவ்வொருவரும் நன்றிகடன் பட்டிருக்கிறோம்.

அவருடைய **171**ஆவது பிறந்த நாள் **19.02.2025 புதன்கிழமை** நிகழவுள்ளது. அன்றைய தினம் அவருடைய தமிழ்ப்பணியை நம் குழந்தைகளுக்கு கற்பிப்போமாக.

**D. சூரியநாராயணன்**

## குரோதி வருஷம் - மாசி மாத விசேஷங்கள்

**(பிப்ரவரி 13.02.2025 முதல் மார்ச் 14.03.2025 வரை)**

| | | |
|---|---|---|
| *16.02.2025* | மாசி *04* ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி |
| *18.02.2025* | மாசி *06* செவ்வாய் | ஷஷ்டி |
| *20.02.2025* | மாசி *08* வியாழன் | அனுஷம் |
| *24.02.2025* | மாசி *12* திங்கள் | ஏகாதசி |
| *25.02.2025* | மாசி *13* செவ்வாய் | ப்ரதோஷம், காஞ்சி ஶ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஜெயந்தி |
| *26.02.2025* | மாசி *14* புதன் | மஹா சிவராத்திரி |
| *27.02.2025* | மாசி *15* வியாழன் | அமாவாஸை |
| *03.03.2025* | மாசி *19* திங்கள் | சதுர்த்தி |
| *05.03.2025* | மாசி *21* புதன் | ஷஷ்டி, கார்த்திகை விரதம் |
| *10.03.2025* | மாசி *26* திங்கள் | ஏகாதசி |
| *11.03.2025* | மாசி *27* செவ்வாய் | ப்ரதோஷம், காஞ்சி ஶ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை |
| *12.03.2025* | மாசி *28* புதன் | மாசி மகம், நடராஜர் அபிஷேகம் |
| *13.03.2025* | மாசி *29* வியாழன் | பௌர்ணமி |
| *14.03.2025* | மாசி *30* வெள்ளி | காரடையான் நோன்பு |

## 27.02.2025 வியாழக்கிழமை அமாவாசை

குரோதி நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே சிசிர ருதௌ, கும்ப மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயம் புண்யதிதௌ வாஸர : வாஸரஸ்து குரு வாஸர யுக்தாயாம் ச்ரவிஷ்டா நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம் குண ஸகல விஸேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 69

**சிதானந்தேன க்ருஷ்ணேன ப்ரோக்தா ஸ்வமுகதோர்ஜுனம்/**
**வேதத்ரயீ பரானந்தா தத்வார்த்தஞான ஸம்யுதா//**

**பொருள் :** *மூன்று வேதங்களின் வடிவமாய், பேரானந்த வடிவமாய், தத்துவத்தை உள்ளபடி விளக்குவதாயுள்ள இந்த ஞானம் சிதானந்த கிருஷ்ணனால் அர்ஜுனனுக்குத் திருவாய் மலர்ந்தருளப் பெற்றது.*

## அத்தியாயம் மூன்று
## கர்மயோகம்

**சொல்லாலும் செயலாலும் ஞானி எதைச் செய்யலாகாது எனின் =**

**ந பு$_3$த்$_3$தி$^4$பே$_4$த$_3$ம் ஜனயேத$_3$ அக்ஞானாம் கர்மஸங்கி$_3$னாம்/**
**ஜோஷயேத்ஸர்வகர்மாணி வித்$_3$வான்யுக்த:ஸமாசரன்//**

**(கீதை 3-26)**

**பொருள் :** *ஞானியானவன் கர்மப்பற்றுள்ள அஞ்ஞானிகளிடத்து மனக்கலக்கத்தை உண்டு பண்ணலாகாது. எல்லா கர்மங்களிலும் தானே ஈடுபட்டுக்கொண்டு மற்றவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.*

**விளக்கம் :** *பெரிய மனிதர்கள் புத்திசாலிகள் அவர்களுக்கு பொறுப்பு அதிகம் உள்ளது. சாதாரண மக்கள் அவர்களைப் பின்பற்றுவார்கள். ஆதலால் அந்த பெரிய மனிதர்கள் சாதாரண மனிதர்களை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் எந்த ஒரு செயலையும் செய்யக்கூடாது. ஞானிகள் அறியாதவர்களுக்கு உயர்ந்த அறிவை வழங்க வேண்டும். அவர்களுக்கு மனக்கலக்கத்தை உண்டு பண்ணலாகாது. புத்தியில் பேதம் உண்டாகக்கூடாது என்று பகவான் கூறுகிறார்.*

*அஞ்ஞானி, ஞானி இருவரும் செயற்படுவதில் என்ன வித்தியாசம்?*

*அடுத்த ஸ்லோகத்தில்*

**ப்ருக்ருதே : க்ரியமாணானி கு3ணை: கர்மாணி ஸர்வச:/**
**அஹங்காரவிமூடாத்மா4 கர்தாஹமிதி மன்யதே//**
**(கீதை 3-27)**

**பொருள் :** *எல்லாச் செயல்களும் எல்லாவிதங்களிலும் பிரகிருதியின் குணங்களால் செய்யப்படுகின்றன. ஆயினும், அஹங்காரத்தால் மழுங்கிய அறிவை. உடைய அஞ்ஞானி "நான் கர்த்தா" என்று நினைத்துக் கொள்கிறான்.*

**விளக்கம் : "ப்ரகிருதி" "குணம்"** *என்று கூறும்போது, அது நம்முடைய மனதில் உள்ள* **"ஸத்வம்" "ரஜஸ்" "தமோ"** *குணங்களைக் குறிக்கிறது.*

*ஒவ்வொரு கர்மத்தின் பின்னாலும் ஒரு குணம் இருக்கும். அவரவரின் மனத்தன்மையைப் பொருத்துதான் கர்மங்கள் இருக்கும். குழந்தையாக இருக்கும்போது அந்த குழந்தை, தூங்கும், எழுந்ததும் பால் குடிக்கும் பிறகு சிறிது விளையாடும், பிறகு மீண்டும் தூங்கும். ஆனால் வளர்ந்து வரும்போது அதன் உள்ளே அஹங்காரம் (Ego) புகுந்ததும் "நான் நான் எனது என்னுடையது" என்று சொல்ல ஆரம்பித்துவிடும்.*

*அஹங்காரத்தினால் உடம்பு, மனம், புத்தியை "நான்" என்று நினைத்துக் கொண்டு* **"நான் செய்கிறேன்"** *என்று கூறுபவன் "முட்டாள்" என்கிறார் பகவான்.*

*தென்னை மரத்திற்கு நாம் சாக்கடை தண்ணீரை இறைத்ததாலும் அது நமக்கு நல்ல ருசியுள்ள இளநீரை (தண்ணீரை) தருகிறது. அது தென்னையின் குணம்.*

*பசு புல்லைத்தின்று நமக்கு நல்ல சத்துள்ள பாலைத் தருகிறது. ஆனால் நல்ல தண்ணீரை குடித்தாலும் நாம் வெளியிடுவது துர்நாற்றம் உள்ள சிறுநீரைத்தான்.*

*அஹங்காரத்தை மூன்றுவிதமாக பிரிக்கலாம். ஒன்று நாம் நினைப்பதுபோல் காரியம் நடந்துவிட்டால் "இது என்னுடைய முயற்சியால் என்னுடைய பலத்தால்தான் நடந்தது" என்று கூறுவோம். அடுத்து "நான்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு இதைச் செய்தும் அதற்கு தகுந்த பலனை பகவான் எனக்குத் தரவில்லை, பின் எதற்காக நான் வாழவேண்டும்" என்று கூறுவோம்.*

*இவ்வாறு மூன்றுவிதமாக நம்முடைய அஹங்காரத்தை வெளிப்படுத்துகிறோம்.*

*அதனால் "அர்ஜுனா நீ அஹங்காரத்தின் பிடியில் விழாதே. அப்படி விழுந்தால் உனக்கு சமபுத்தை கிடைக்காது" என்கிறார் பகவான்.*

*பின்பு* **"ஞானியோவெனில்"?** *அடுத்து ஸ்லோகத்தில் தொடரும்.....*

## குத்தாலம் — பாவை விழா

*வேதபாரதி மற்றும் சுபிக்ஷா ஹிந்தி வித்யாலயா, மங்கள சக்தி சமிதி இணைந்து 05.01.2025 அன்று ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் ஆலயம், மேல அக்ரஹாரம் மாதிரிமங்கலத்தில் திருப்பாவை ஒப்புவித்தல் போட்டி மிகச்சிறப்பாக நடைபெற்றது 30க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து 1-ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் 250க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு சிறப்பு பரிசு, முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசுத் தொகையாகவும், பரிசுப் பொருட்களாகவும் வழங்கி மகிழ்ந்துள்ளார்கள், எல்லாக் குழந்தைகளுக்கும் சான்றிதழ்களும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. 2ம் ஆண்டாக நடைபெறும் இந்நிகழ்ச்சி அனைத்து பொதுமக்களிடமும் மிகப்பெரும் வரவேற்பை பெற்றது. சுபிக்ஷா ஹிந்தி வித்யாலயா, மங்கள சக்தி ஸமிதிக்கு வேதபாரதியின் பாராட்டுக்கள்.*

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி பகுதி - 47

## ஸ்கந்தம் – 5
## "ஜடபரதர்" சரித்திரம்

ஒரு சமயம் காட்டுமிராண்டிகளின் தலைவன் ஒருவன், தனக்கு மகப்பேறு வேண்டி, பத்ரகாளிக்கு நரபலி கொடுக்க குறையற்றமனிதன் ஒருவனைத் தேடிக்கொண்டுவந்து வைத்திருந்தான். ஆனால் அவன் தப்பி ஓடிவிடவே அவனைத் தேட பணியாட்கள் புறப்பட்டார்கள்.

அப்போது ஒரு வயலில் **"பரதன்"** தனியாக காவல் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். **"பரதன்"** எல்லா அங்கங்களும் பூர்த்தியாக மிக அழகாக இருப்பதைப் பார்த்தார்கள். ஓடிப்போனவனை தேடுவதை விட இவனை காளிக்கு பலியிட்டால் தேவி மகிழ்ச்சியடைவாள் என்று எண்ணி பரதனிடம் சென்று அவனது கை கால்களைக் கட்டி தூக்க நினைத்தனர். பரதனும் ஏதும் கூறாமல் அவர்களுடன் கிளம்பி வந்துவிட்டார்.

கோயிலை அடைந்ததும் பரதனுக்கு ஸ்நானம் செய்வித்து, புதிய வஸ்திரங்களை அணிவித்து, நெற்றி திலகமிட்டு கழுத்தில் மாலையிட்டு சாப்பிட ஆகாரம் கொடுத்து பின் காளியின் முன் கொண்டு நிறுத்தினார்கள். இவை எல்லாவற்றுக்கும் பரதன் மகிழ்ச்சியாக ஒத்துழைத்தார்.

அப்போது பூசாரி ஆடிப்பாடிக்கொணடு வந்து நரபலியிடுவதற்காக கூரிய வாளைக் கையில் எடுத்துக்கொண்டு பரதனின் தலையை வெட்ட வாளை ஓங்கினான்.

பகவான் தன்னை பழித்தாலும் பொறுப்பார். தன் அடியாரை பழித்தால் பொறுப்பாரா? பூசாரி கையை ஓங்கியதும் ஒரு ஹுங்கார சப்தம் கேட்டது. அடுத்த நொடி அந்த விக்ரஹத்திலிருந்து தேவி காளி கோர ரூபத்தோடு வெளிப்பட்டாள். அங்கிருந்த பூசாரி மற்றும் அங்கிருந்த அத்தனை பாவிகளின் தலைகளையும் வெட்டிப் பந்தாடினாள்.

பரதனோ ஆடிக் கொண்டிருக்கும் அன்னையை அதே மாறாத முக மலர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார். தன்னை பூசாரி வெட்ட வந்ததையோ, அன்னை காத்ததையோ எதையும் உணராமல், அனைத்தையும் ப்ரும்மாகவே கண்டு எந்தச் சலனமும் இன்றி ஆனந்தத்தில் மூழ்கியிருந்தார்.

பகவானை தஞ்சமடைந்தவர்கள், தங்களுக்கு எது நேர்ந்தாலும் கலங்கமாட்டார்கள். அவர்கள் ஆத்மாவில் லயிப்பதால் அவர்கள் நான் எனது, தன் சரீரம் என்று நினைப்பதில்லை. சரீரத்துடனான உணர்வு அறுந்துவிட்டதால் சரீரத்தை பிறிதொரு பொருளாய் காண்கிறார்கள்.

பரதன் அந்த கோவிலை விட்டு வெளியே வந்து தன் வீட்டிற்குப் போக விருப்பமின்றி மனம் போனவாறு சுற்றத் தொடங்கினான்.

அடுத்ததாக பரதன் சிக்கிக்கொண்டது ஒரு அரசனிடத்தில்.

ஸ்ரீமத் பாகவதம் தொடரும்...

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **பகுதி 39**

## அத்தியாயம் 16
## (ஹஸ்தாமலகன்)

*மூகாம்பிகையிலிருந்து கிளம்பிய ஸ்ரீசங்கரரும் சிஷ்யர்களும் 'ஸ்ரீபலி' என்கிற கிராமத்தை அடைந்தார்கள். அந்த கிராமத்தில் ஆசாரசீலர்களான பிராமணர்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வந்தனர்.*

*அந்த கிராமத்தின் நடுவில் ஒரு அழகான பார்வதி, பரமேஸ்வரரின் ஆலயம் இருந்தது. ஸ்ரீசங்கரர் அந்த ஆலயத்தில் பகவானை தரிசித்து பின் ஒரு ஏகாந்தமான இடத்தை அடைந்து ஓய்வெடுத்தார்.*

*அதே கிராமத்தில் 'பிரபாகரர்' என்ற தர்மநெறி தவறாத பிராமணர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருடைய ஒரே மகன் பிறந்ததிலிருந்து ஊமையாகவும், மந்த புத்தி போலவும், வெளிப்படையான உணர்ச்சிகள் இல்லாமல் இருந்தான். பல வைத்தியர்களிடம் காண்பித்ததில் அவர்கள் அந்த பாலகனுக்கு எந்த வியாதியும் இல்லை, எந்த காரணத்தினால் இப்படி இருக்கிறான் என்று தங்களுக்கு புரியவில்லை என்று கூறிவிட்டனர்.*

*ஸ்ரீசங்கரர் அந்த கிராமத்திற்கு வந்திருப்பதை அறிந்த அந்த பிராமணர் தன் 12 வயது குழந்தையை ஸ்ரீசங்கரரிடம் அழைத்துவந்து, அவனை நமஸ்காரம் செய்யவைத்து தானும் நமஸ்காரம் செய்து ஆசாரியரிடம் 'பகவான் இவன் குழந்தைப் பருவத்திலிருந்தே இப்படித்தான் இருக்கிறான். எதிலும்*

ஈடுபடுவதில்லை, எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்துவதில்லை. ஜடம்போல் இருக்கிறான், தாங்கள்தான் அருள்புரியவேண்டும்' என்றார்.

ஸ்ரீசங்கரர் அந்த பாலகனை தன் பக்கத்தில் அழைத்து அவனுடைய இரண்டு கைகளையும் அன்புடன் பிடித்துக்கொண்டு 'ஹே குழந்தாய், நீ யார்?, எங்கிருந்து வருகிறாய்? உன்னை பார்க்க எனக்கு சந்தோஷமாக இருக்கிறது, நீ யார்?' என்று கேட்டார்.

அதுவரையிலும் வாய் திறந்து பேசாமல் இருந்த அந்த பாலகன், மடை திறந்த வெள்ளமாக 'நான் மனிதனோ, கடவுளோ, தெய்வமோ அல்ல. பிராமணனோ, க்ஷத்திரியனோ, ப்ரும்மச்சாரியோ, அல்லது க்ருஹஸ்தனும் அல்ல. நான் ஆத்ம ஞான ஸ்வரூபம்...' என்று அத்வைத தத்துவத்தின் சாரத்தைக் கொண்ட 12 வசனங்களை ஸ்ரீசங்கரருக்கு பதிலாக கூறி அவருடைய திருவடிகளை நமஸ்கரித்தான்.

இதைக்கேட்ட ஸ்ரீசங்கரர் அந்த பாலகனை ஆலிங்கனம் செய்துக் கொண்டு அவனுடைய தந்தையிடம் இவன் உங்கள் மகனன்று, இவனை உலக வாழ்க்கையில் ஈடுபடுத்த முடியாது. இவன் அதற்கு தகுந்தவனுமல்ல. எனவே இவனை என்னிடம் ஒப்படைத்துவிடுங்கள்' என்று கூறி, இவன் உள்ளங்கையில் இருக்கும் நெல்லிக்கனி போன்று ஆத்மதத்துவத்தை தன் ஹிருதயத்தில் அடக்கி கூறியுள்ளதால் இன்று முதல் இவன் 'ஹஸ்தாமலகன்' என்று அழைக்கப்படுவான். இவன் கூறிய 12 ஸ்லோகங்களும் 'ஹஸ்தாமலக ஸ்தோத்திரம்' என்று அழைக்கப்படும்' என்றார். பிறகு ஸ்ரீசங்கரரே ஹஸ்தாமலக ஸ்தோத்திரத்திற்கு பாஷ்யம் எழுதினார்.
குழந்தை பேசியதைக் கேட்டு மிகவும் சந்தோஷமடைந்த அவனுடைய பெற்றோர்கள்,

ஸ்ரீசங்கரர் வாக்கைக் கேட்டு சிறிது வருத்தம் அடைந்தாலும் குழந்தையின் நிலையைக் கருத்தில் கொண்டு அவனை ஸ்ரீசங்கரரிடம் ஒப்படைத்துவிட்டனர். ஸ்ரீசங்கரர் அவனைத் தன் சீடனாக ஏற்றுக்கொண்டு அவனுக்கு சன்யாசம் கொடுத்து தன் கோஷ்டியுடன் இணைத்துக் கொண்டார்.

அதன்பிறகு ஸ்ரீ சங்கரர் தன் சிஷ்யர்களுடன் 'சிருங்ககிரி' அடைந்தார்.

யாத்திரை தொடரும்...

**வேதவகுப்பு**

வேதவகுப்புகள் சேர்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
94451 02193 / 9994926537 / 98402 01625

வார இறுதி நாட்கள் யஜுர் வேத வகுப்பு ஆரம்பமாகி உள்ளது. இணைந்து பயன்பெற வேண்டுகிறோம்.


**Er. D.A. Devapaull**
Managing Director

**D.A. Devapaull**
DPT, Trainer


**STAR BUILDERS AND DEVELOPERS**
... we build your dreams

C-95, Thally Hudco
Hosur - 635 109.
starbuildershosur@gmail.com

**STAR GYM & FITNESS CENTRE**

#2, Renuga Devi Complex,
ESI Ring Road,
Muniswar Nagar,Hosur.

**We are specialised in :**
Industrial & Commercial Buildings
Residential Buildings, Apartments & Villas
Road Works & Layout
Approval Drawings & Structural Design
Star Earth Movers & Constriction Material Suppliers



- Weight Loss
- Weight Gain
- Fitness Training
- Strength Training
- TRX Training

**Cell : 94421 02057 / 70106 23102**

## ஔவையார்

# "மூதுரை"

*(பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டது)*

## வெண்பா 29

**மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல**
**உருவும் உயர் குலமும் எல்லாம்-திரு மடந்தை**
**ஆம் போது அவளோடும் ஆகும்; அவள் பிரிந்து**
**போம் போது அவளோடு போம்.**

**பொருள்** = ஒருவனைச் சூழ்ந்து வாழும் இனிய சுற்றமும், அவனுடைய பெரும் செல்வமும், அவன் அழகும், அவன் குலப் பெருமையும் லக்ஷ்மி கடாக்ஷம் ஒருவனுக்கு இருக்கும் வரையில்தான் அவள் அகலும் போது இவையனைத்தும் போய்விடும்.

**விளக்கம் = 'திரு மடந்தை'** என்றால் **'லக்ஷ்மி தேவி'. 'லக்ஷ்மி தேவி'** அருள் ஒருவனுக்கு இருந்தால் அவனுக்கு வானளாவிய செல்வம் பெருகும், உடலில் நல்ல அழகு தோன்றும், அவன் உயர்ந்த குலத்தவர் என்று போற்றப்படுவான். அவனுடைய சுற்றத்தார்கள் அவனை விரும்பி சூழ்ந்துகொள்வார்கள்.

ஆனால் அந்த திருமகள் (லக்ஷ்மி தேவி) அவனை விட்டு சென்றுவிட்டால் மேலே குறிப்பிட்ட அனைத்தும் அவனை விட்டு போய்விடும்.

ஆகையால் திருமடந்தையின் அருள் (லக்ஷ்மி தேவியின் அருள்) நம்மிடம் இருக்கும்போது, அதாவது செல்வம் நம்மிடம் இருக்கும்போதே அதை நல்ல வழியில் தான தருமங்கள் செய்து புண்ணியமாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*

**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

வேளச்சேரி

ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா



# ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும்

**நாராயணன்** **பகுதி 5**

## அத்தியாயம் – 3
## கோவிலின் தோற்றம், வளர்ச்சியும்

மஹாதேவன் (சிவன்) அருள் புரிந்ததைக் கேட்டு **குருவும், வாயுவும்** மிகவும் சந்தோஷமடைந்தார்கள். சுபமான ஒரு முகூர்த்தத்தில் அவ்விருவரும் அந்த தடாகத்தின்– ருத்திரதீர்த்தத்தின்– தென்கரையில் அந்த விக்ரஹத்தை பிரதிஷ்டை செய்தார்கள். பிறகு தேவர்களின் ஆசிகளையும், வரத்தையும் பெற்ற“**விஸ்வகர்மாவை**”வரவழைத்து ஆலயத்தை கட்டினார்கள்.

பாரம்பரிய கதைகளின்படி, இந்த கோவில் கலியுக ஆரம்பத்தில், 5000 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. குருவாயூர் கோவில் குறித்த வரலாற்று சுவடிகள் ஏதும் இல்லை. ஆனால் 14ஆம் நூற்றாண்டில் (1301 முதல் 1400 வரை) **“கோகசந்தேசம்”** என்ற தமிழ் வரலாற்று படைப்பில் **“குருவாயூர்”** பற்றி ஒரு குறிப்பு காணப்படுகிறது.

1637-ஆம் ஆண்டு **“கோலெழுத்துகளில்”** கோவில் பதிவுகள் கிடைத்தன. (கோலெழுத்து என்பது கேரளாவில் ஒரு காலத்தில் மலையாள மொழியை

*எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு சிலாபிக் எழுத்துக்கள் ஆகும்)*

*1638-ஆம் ஆண்டு மத்திய ஆலயம் மீண்டும் கட்டப்பட்டது.*

*1716 ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் குருவாயூரில் படையெடுத்து மேற்கு கோபுரத்தை தீயிட்டு கொளுத்தினார்கள்.*

*1730 கோவிலின் தோற்றம்*




*1747 – ஆம் ஆண்டு டச்சுக்காரர்களால் தீயிட்டு கொளுத்திய மேற்கு கோபுரத்தை "பணிக்கவீட்டில் இட்டிராயச்சா" மேனனால் புனரமைக்கப்பட்டது.*

*1757-ஆம் ஆண்டு* **"ஜமோரின்"** *என்பவர் கோவிலின் மேற்பார்வை அறங்காவலராகவும்,* **"மல்லிசேரி"** *என்பவர் இணை அறங்காவலர்கள் ஆனார்கள்.*

*1766 ஆம் ஆண்டில், மைசூரை சார்ந்த ஹைதர் அலி குருவாயூரை அடுத்த "சாவக்காடு" என்ற ஊரில் தன் படையை நிறுத்தி கோழிக்கோட்டையும் குருவாயூரையும் கைப்பற்றினான். கோவிலை விடுவிக்க வேண்டுமானால் 10,000 பானம்ஸ் (ஒரு வகையான காசு பணம்) கப்பமாக கேட்டார். அந்த அபராத தொகை கட்டப்பட்டது. ஆனால் அப்போது நிலவிய நம்பிக்கை இல்லாத சூழ்நிலை காரணமாக கோவிலுக்கு பக்தர்கள் வருகை குறைந்தது. கோவிலுக்கு வழங்கப்பட்ட*

*அரிசியும் நிறுத்தப்பட்டது. வாடிக்கையாளர்கள் செலுத்த வேண்டிய நிலுவைகளும் செலுத்தவில்லை. அந்த நாட்களில் மலபார் கவர்னராக இருந்த ஸ்ரீசீனிவாச ராவ் என்பவர் கோவிலை விடுவிக்குமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்ற ஹைதர் அலி பகவானுக்கு கருணை காட்டியதாக கூறி (இலவசப் பரிசு) கோவிலை விடுவித்தார்.*

*மீண்டும் 1789ஆம் ஆண்டு திப்பு சுல்தான் குருவாயூரை தாக்கினான். அந்த அழிவிலிருந்து கோவிலை காக்க மூல விக்ரஹம் நீர் நிறைந்த கிணற்றில் மறைத்து வைக்கப்பட்டது. உற்சவர் விக்ரஹம் (திடம்பு)* **“மல்லிசேரி நம்பூதிரி”** *மற்றும்* **“கக்காத் ஓத்திகன்”** *ஆகியோரால் ஆலப்புழா என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. திப்பு சுல்தான் கோவிலுக்கு தீ வைத்தான். ஆனால் சரியான நேரத்தில் மழை பொழிந்ததால், கோவில் தீயிலிருந்து காப்பாற்றப்பட்டது.*

*1792-ஆம் ஆண்டு திப்பு சுல்தானுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் நடந்த போரில் திப்பு சுல்தான் தோல்வி அடைந்தான். 17-09-1792-ம் தேதி மூல விக்ரஹம் திரும்பவும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆனால் நித்திய பூஜைகளும், சடங்குகளும் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது.*

தொடரும்...


99940 89133 99940 89140

SRI SASTHA CATERING

We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Varieties on Order

28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
WOPPER
Fluid Chemistry



# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## ஹிந்து மதம்

நம் மதத்தின் புனர்ஜன்மக் கொள்கைக்கு ஆதரவாக ஒன்றைஅழுத்தமாகக் காட்டலாம். வெள்ளைக்காரி ஒருத்தி என்னிடம் வந்து இந்த Reincarnation விஷயத்துக்கு நிரூபணம் (proof) கேட்டாள். நான் அவளிடம் வாதம் ஒன்றும் செய்யவில்லை. அப்போது மடத்து முகாமில் ஒரு பண்டிதர் இருந்தார். அவருக்கு இங்கிலீஷூம் வரும். அவரிடம் அவரை அங்கே உள்ள பிரஸவ ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போய், அங்கே பிறந்திருக்கிறகுழந்தைகளைப் பற்றிய விவரங்களைக் குறிப்பெடுத்துக் கொண்டு வரும்படி சொன்னேன். அவளும் அப்படியே பிரஸவ ஆஸ்பத்திரிக்கு அவரோடு போய்விட்டு வந்து குழந்தைகளைப் பற்றிய குறிப்புகளைச் சொன்னாள். அதன்படி ஒரு குழந்தை கொழு கொழுவென்று இருந்தது; இன்னொன்று நோஞ்சானாக இருந்தது. ஒன்று அழகாக இருந்தது; இன்னொன்று அவலட்சணமாக இருந்தது. ஒன்று உசத்தியான ’வார்டி’ல் சௌகரியமாகப் பிறந்தது; இன்னொன்று சொல்லி முடியாத கஷ்டங்களுக்கு நடுவே ஒரு பரம ஏழைப் பெண்ணுக்குப் பிறந்தது. “ஜன்மாவின் கடைசியில் பகவான் ஒருத்தரை நிரந்தர நரகத்துக்கு அனுப்புவது ஒரு பக்கம் இருக்கட்டும். அது நமக்குக் கண்ணுக்குத் தெரியாத விஷயம். இப்போது பல ஜன்மங்களின் ஆரம்பத்தைப் பிரஸவ ஆஸ்பத்திரியில் பிரத்யக்ஷமாகப் பார்த்தாயே! இதிலே ஏன் இத்தனை ஏற்றத் தாழ்வுகள்! ஏன் ஒன்று தாரித்திரியத்திலும் இன்னொன்று சம்பத்திலும் பிறக்க வேண்டும்?

தொடரும்...

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## நிலையற்ற வாழ்க்கை




வசிஷ்ட மஹரிஷி ஒரு பெரிய தபஸ் சக்கரவர்த்தி. மிகுந்த தவவலிமை பெற்றுத் திகழ்ந்த அவர். தம்மிடத்தே நந்தினி என்னும் ஒரு பசுவை வைத்திருந்தார். அதனிடமிருந்து ஒருவன் எதை விரும்பினாலும் அதை அது கொடுக்கவல்லது. விச்வாமித்திர முனிவர் அரசனாய் இருந்த சமயத்தில், வசிஷ்டருடைய ஆசிரமத்தின் வழியாக ஒரு நாள் அவர் செல்ல நேர்ந்தது. வசிஷ்டர் விச்வாமித்திரரைத் தம் ஆசிரமத்திற்கு வரவேற்று, அவருக்கும் அவருடன் வந்திருந்த அவருடைய பெரிய சைன்யத்திற்கும் நந்தினியைக் கொண்டு ஒரு பெரிய விருந்தையளித்தார். நந்தினியின் விசேஷமான சக்தியை அறிந்த விச்வாமித்திரர், அப்பசுவை எப்படியாவது தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என நினைத்தார். எனவே, நந்தினியைத் தனக்குத் தருமாறு வசிஷ்டரிடம் கேட்டார். ஆனால் வசிஷ்டர் அதை கொடுக்க மறுத்துவிட்டார்.

பிறகு, விச்வாமித்திரர் வசிஷ்டருடன் போர் புரிநது பலவந்தமாக அப்பசுவைக் கைப்பற்றிக்கொள்ள முயற்சித்தார். அவருடைய முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தன. இதனால் ஏற்பட்ட அவமானத்தைப் பொறுக்க முடியாமல் விச்வாமித்திரர் அவ்விடத்தைவிட்டுச் சென்று, தவம் புரியத் தொடங்கினார்.

தொடரும்...

# தர்மத்தின் குரல் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-9 வேதங்கள் வெளிப்பட்டவிதம் தொடர்ச்சி :*

வேதங்களின் அடிப்படை இயல்புகளை அவர்கள் மறக்கிறார்கள். வேதங்களை எழுதியவர்களின் பெயர்களாக எங்கும் குறிப்பு இல்லை, வேதங்களின் இசைக்கட்டமைப்பு கலையாமல், குலையாமல் காலங்களைக் கடந்து தொடர்கிறது, அவை கற்பனைக்கெட்டாத விஸ்தாரம் கொண்டவை, வானினும் பெரிதான அளவினைக் கொண்டவையாயினும் முரண்பாடு எதுவுமே இல்லாதவை, நவீன கண்டுபிடிப்புகளெல்லாம் வேதங்களில் ஏற்கனவே இருப்பவையே, அவை செய்திச்சுரங்கம், அவை எத்தகைய ஆசோ மாசோ அற்றவை - என்ற வேதங்களின் அடிப்படை அம்சங்களை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

மந்திரங்கள் மனிதர்களால் உச்சாடனம் செய்யப்படுவதால், அவை மனிதனால்தான் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற மிக இலகுவான வாதத்தின் அடிப்படையிலான அவர்களின் யூகங்களைப் பரப்புகிறார்கள்; முதிர்ச்சியற்ற குழந்தைத்தனமான கொள்கைகளைக் கூறுகிறார்கள். மேனாட்டு அறிஞர்கள் என்று சொல்லப்படும் சிலரின் கொள்கைகள், கருத்துகள் எல்லாம் ஏகாதிபத்திய எண்ணங்களின் அடிப்படையிலேயே தோன்றியவை என்பறதகு, மறுக்கமுடியாத சான்றுகள் உள்ளன.

தொடரும்...

## திருச்சி - கோடீ காயத்ரீ ஜப யக்ஞம்



## சேலம் - கோடீ காயத்ரீ ஜப யக்ஞம்



## கும்பகோணம் - யுவஶ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்



# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY


A&B PRODUCTS
Manufacturers - Quality Paper Bags and Boxes
• Bags for Mens Wear, Boutique, Garments, Textiles, Shoe Mart, Medicals Shops, Restaurants, Bakery & Much More
• Box for Bakery, Restaurant, Fast Foods, Medicals, Electronics, Cosmetics & Much More
+91-6379 985 988
Trichy, Tamil Nadu, India

# மூத்தோரே! கவனியுங்கள்!

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 4 பகுதி - 2

## அத்தியாயம் – 2

பேரன் (அ) பேத்திக்கு 6 வயது ஆகும்வரை அவர்களோடு பிறந்த கணம் முதல் கழிக்கும் நேரம் மிக, மிக அற்புதமானது.

என் வம்சக் கொழுந்து, இறைவன் எங்களுக்கு அளித்த பரிசு என்று மிக, மிக மகிழ்ச்சியாக கழிக்கும் காலம்

பிரசவம் முடித்த மகளோ (அ) மருமகளோ தாத்தா – பாட்டியிடம் பிஞ்சுக் குழந்தையைக் கொடுத்துவிட்டு ஓய்வெடுக்கலாம். நாம் நம்முடைய காலத்தை இன்றைய தாத்தா – பாட்டியாக நாம் மாறிய காலகட்டத்தினை தயவு செய்து ஒப்பிடாதீர்கள்.

பிரசவமான பெண்ணுக்கு உதவ ஒரு கூட்டம், பிறந்த பிஞ்சுக் குழந்தையை கொண்டாட ஒரு கூட்டமென்று ஓயாது வீடு முழுவதும் சொந்த-பந்தங்களால் நிறைந்த ஒரு காலகட்டம்.

இன்று, "என் கணவரே 'டயாபர் மாற்றுவார், அவரே குளிப்பாட்டுவார்" என்று கூறும் மகள் (அ) மருமகளைப் பார்த்து திகைத்து நிற்கும் 'பெரியவர்களில்' நாமும் ஒருவராக உள்ளோம் என்று உணர வேண்டிய காலகட்டம் இது.

ஆம், அம்மா – அப்பாவாக 'மாய்ந்து மாய்ந்து' நாம் செய்த வேலைகளெல்லாம் இன்று அவர்கள் பொறுப்பெடுத்து செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டால் போதும். நாம் 'சஷ்டியப்தபூர்த்தி' செய்து

கொண்ட ஜோரில் மறந்துவிட்ட வனப்பிரஸ்தாஸ்ரமம் நினைவிற்கு கொண்டு வர வேண்டிய காலகட்டம் இது.

'நம்மை ஒதுக்குகிறார்கள், நம்மிடம் எதுவும் கேட்பதில்லை' என்று தனக்குள் பொங்கி எழுந்து எரிமலையாக வெடித்து எழத் தயாராக இருக்கும் கோப வேகத்தை அடக்கத்தான் நம் சாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள், உபநிஷத்துக்கள், பகவத்கீதை, திருக்குறள், ஔவையின் மூதுரைகள், சாணக்கியன் சாமர்த்திய அம்புகள் உள்ளனவே.

இவற்றையெல்லாம் படித்திருந்தால் உபயோகப்படுத்துங்கள். இதுநாள் வரை படிக்கவில்லையென்றால் 'வேதபாரதி' பத்திரிகை மற்றும் அதில் எழுதும் திரு.சூரியநாராயணன் அவர்களைப் போன்ற பலரின் எழுத்துக்களை படியுங்கள். ஆனந்தமாக சனாதன தர்மம் எனும் படகில் குரு படகோட்டியின் உதவியுடன் பகவான் நம் தலைமீது விரித்து வைத்திருக்கும் அருள் எனும் குடையோடு சம்சார சாகரத்தைத் தாண்டிய உலகிற்கு பயணிப்போம் வாருங்கள்.

என்ன, ஒரே வார்த்தை ஜாலங்களாக இருக்கிறதே என்று நீங்கள் 'மைண்ட் வாய்ஸில்' பேசுவதும் எனக்கு கேட்கிறது.

மேலே எழுதிய அனைத்தும் கூறும் ஒரு விஷயம் 60 வயதைத் தாண்டிய ஒட்டியும் – ஒட்டாமலும், இருந்தும் – இல்லாமலும், பிரிந்தும் – பிரியாமலும் வாழும் வாழ்க்கையைப் பற்றி பல்வேறு விஷயங்களைப் பற்றி கூறுகிறது.

இதை நம்மை சுற்றியுள்ள நம் சொந்த பந்தங்களிடம் உபயோகித்தால் ஆனந்தமயமாக வாழ்க்கை வாழலாம்.

*இன்றைய வனப்பிரஸ்தாஸ்ரமம் என்பது எந்த வனத்திற்கு நாம் செல்வது என்பதில்லை. கூட்டம் கூட்டமாக சேர்ந்து 'கோயில் டுர்கள் செல்வத்தில்லை. நான்கு சுவர்கள் இரண்டு அல்லது மூன்று பெட்ரூம்களுக்குள் அடங்கும் வாழ்க்கையில் தனிமையை ரசிப்பது, ருசிப்பதில் மட்டுமே அடங்கிவிட்டது.*

*தலைமுறை இடைவெளி நமக்கும் பேரக்குழந்தைக்கும் இருப்பதை உணர்ந்து, புரிந்து கொண்டால் வனப்பிரஸ்தாஸ்ரமம் இனிக்கும்*

*வெவ்வேறு காலகட்டங்களில் பிறந்தவர்கள் ஒரே மாதிரி யோசித்து, ஒரே மாதிரி உடை உடுத்தி, ஒரே மாதிரி பேசி, வாழ முடியுமா? 'முடியாது' என்பதை 'சைக்காலஜி' அடித்துக் கூறுகிறது. அதேசமயம் இந்த வித்தியாசங்களில் எது தவிர்க்க கூடியது, எது தவறானது என்று கண்டுபிடிப்பது தான் இன்றைய மூத்தோருக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.*

*மாற்றங்களை ஏற்றுக் கொள்வது ஒரு பக்குவமான நிலை. அதில் தவறு எது என்று உன்னிப்பாக தெரிந்து, அழ்றகான தீர்வுகளை அளிப்பவர்கள் தான் பக்குவப்பட்ட மூத்தோர்கள்.*

**"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.** *(அதிகாரம் 37 குறள்– 370)*

*'மன நிறைவைத் தராத இயற்கையான ஆசையை நீக்கி விட்டால் அக்கணம் முதல் எப்பொழுதும் நீங்காத தன்மையுள்ள இன்பம் உண்டாகும்' என்கிறார் வள்ளுவர்.*

*தொடரும்...*

# பூக்களோடு பேசுவோம்
## ரோஜா - சர்வதேச மலர் - 2

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**



கிரிஜா வீரராகவன் என்பவர் “இந்திய ரோஜாக்களின் வரலாறு பற்றி மிக அருமையான ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதியுள்ளார். அரிய விஷயங்கள் பல அவற்றில் தொகுக்கப்பட்டுள்ளது. அவர், “பிரும்மாவுக்கும், விஷ்ணுவுக்குமிடையே “எந்தப்பூ எல்லாற்றிலும் சிறந்தது. அழகானது வோட்டுப் போட, விஷ்ணு ரோஜாவுக்குப் போடுகிறார். ஆனால் மகா விஷ்ணுவின் லதாமண்டபத்திலுள்ள மிக அழகிய ரோஜா தோட்டத்தைப் பார்த்ததும், பிரம்மா, ரோஜாவின் மேன்மையை தாமரைவிட அழகானதையும், வாசனை மிகுந்ததையும் ஏற்றுக் கொண்டு விடுகிறார்” என்று குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்வு புராணங்களில் இடம் பெற்றுள்ளதா என்று தெரியவில்லை.

இந்திய ஆயுர்வேதத்தின் தந்தையான சரஹர் “சரஹ சம்ஹிதை”யில் ரோஜாவிற்கு வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. “சதபக்தி” (100 இதழ்கள் கொண்டது. “சிவப்ரியாரு (கயிலாய மலையில், சிவனுக்குப் பிரியமான ரோஜாக்கள்) “சௌம்யகந்தா” (மிகுந்த நறுமண முடையது) “சுசிதா, “சுமனா”, “கவிதா”, “அதிமஞ்சுளா”, “செவந்திகா”, “தரூணி புஷ்பா” என்றெல்லாம் பல வகையான பெயர்கள் பல வகையான ரோஜாக்களுக்குச் சொல்லப்பட்டுள்ளன.

புத்தரின் சிலைகள் பெரும்பாலும் தாமரை

*மலரில் அமர்ந்திருப்பதாகவே வடிக்கப்பட்டிருந்தாலும், காந்தாரா கல்விக் கூடத்தின் சில சிலைகளில் புத்தர் ஐந்து இதழ்கள் கொண்ட ரோஜாவின் மீது உள்ளனவாம். வாத்சாயனரின் காம சூத்திரத்திலும் ரோஜா மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.*

*1,300 ஆண்டுகளுக்கு முன் குஜராத் பகுதிகளில் பயணம் மேற்கொண்ட இஸ்லாமிய யாத்ரீகர் ரக்ஷீத் உத்தீன் என்பவர் தனது பயணக் குறிப்பில், "இங்கே மக்கள் மிகவும் செல்வந்தர்களாகவும், சந்தோஷமாகவும் இருப்பதுடன், 70க்கும் மேற்பட்ட வகைகளில் ரோஜா செடிகள் வளர்ப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.*

*14 – 15ம் நூற்றாண்டுகளில் விஜயநகரப் பேரரசுக்குட்பட்ட பகுதிகளில் பயணித்த அயல்நாட்டு யாத்ரீகர்கள் ஏராளமான ரோஜா வர்த்தகம் பற்றியும், அந்த மலரை ஆன்மீகத்திற்காகவும், மருத்துவத்திற்காகவும் பயன்படுத்தும் விவரங்களைத் தொகுத்துள்ளனர். ராஜா ராணிகளின் மலர் குளியல்கள் பற்றியும் மஞ்சம் முழுவதும் அந்த ரோஜாக்கள் பதித்திருப்பதையும் குறிப்பிட்டுள்ளார். அதே கால கட்டத்தில் பயணித்த அப்துல் ரசாக் (1443) எனும் யாத்ரீகர், "ரோஜாக்கள் எங்கும் விற்கப்படுகின்றன. ரோஜாக்கள் இல்லாது இந்த மக்களுக்கு வாழ இயலாது போலிருக்கிறது. ரோஜாவைத் தங்களது பிரதான உணவு போல் கருதுகிறார்கள்" என்று பதிவு செய்துள்ளார்.*

*இந்தியாவில் முகலாயர்களது ஆட்சியில் ரோஜா செடிகள் பாரசீகத்திலிருந்தும், ஆஃப்கானிஸ்தானத்திலிருந்தும் ஒட்டகங்கள் மீதேற்றி ரோஜா பூக்கள் கொண்டு வரப்பட்டுள்ள வரலாறுகள் உண்டு. தாஜ்மஹாலைச் சுற்றியும், காஷ்மீரத்து ஷாலிமார் தோட்டங்களிலும் கண்கவர் ரோஜாக்கள் வளர்க்கப்பட்டன.*

கிழக்கிந்தியக்காரர்கள் காலத்திலும், சீன ரோஜாக்கள் நம் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. ராஜஸ்தானில் புஷ்கர் எனும் இடத்திலும், உத்திரபிரதேசத்தின் சில பகுதிகளிலும் ரோஜா வகைகள் பல மருத்துவத் தேவைகளுக்காக வளர்க்கப்பட்டன.

கவிஞர்களின் செல்லமலர் ரோஜா தான். இதன் புகழ் பாடாத உலகக் கவிஞர்களே இல்லை. தமிழனும் விதிவிலக்கல்ல. எத்தனையோ பாடல்கள் ரோஜா மலரையே சுற்றி வருகின்றனர்.

நாமெல்லாம் ரோஜாவை நேருஜியுடன் நினைத்துப் பார்த்துப் பழகியுள்ளோம். ரோஜா பிரியர். சிறந்த கலாரசிகர் அவர். அண்ணல் காந்திஜியோ "A Rose does not preach – It simply spreads its fragrance" (ரோஜா உபதேசங்கள் செய்வதில்லை. எளிமையாய்த் தன் மணத்தை மட்டுமே பரப்புகின்றது) என்கிறார். அரவிந்த அன்னை பல்வேறு வண்ண ரோஜாக்களுக்கு பல்வேறு ஆன்மீக குணங்களை ஒப்பிடுகிறார். "இறைவன் பால் உள்ள அன்பை" வெளிப்படுத்தும் அழகு மலர் என்கிறார். அவரின் பட்டியலில் இடம் பெற்றுள்ள சில முக்கிய வண்ண ரோஜாக்களின் ஆன்மீகப் பொருள் இதோ:

இறைவனின் மீது அன்பாக மாறிய மனிதனின் உணர்ச்சி - சிவப்பு ரோஜாக்கள், இறைவனின் மீது அளவற்றஆனந்த உணர்வு – மஞ்சள் ரோஜாக்கள், இறைவன் மீது முழுமையான அன்பு – தூய வெள்ளை ரோஜா இறைவனிடம் முழுமையான சரணாகதி - நாட்டு ரோஜா, அதிக மணமுள்ள இளம் சிவப்பு ரோஜா, இறைவன் மீது பற்றுவைப்பதில் துணிவின்மை - சிறிய பச்சை ரோஜா.

பொதுவாகவே மனிதன் தன் வாழ்க்கையில், ரோஜாக்களை தன் உணர்வுகளுக்குத் தகுந்த வண்ணங்களின் மூலம் வெளிப்படுத்துவதை

வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். அதன்படிப் பார்த்தால்,

சிவப்பு – காதலையும், மஞ்சள் – மகிழ்ச்சியையும் காதலற்றநட்பினையும், வெள்ளை - தூய்மை, அன்பு, ஆன்மீகம், சமாதானம், அமைதி, அனுதாபம் ஆகியவைகளையும், செம்மஞ்சள் – அதிப்பையும், ஊதா ரோஜா – வசீகரம், கம்பீரத்தையும் குறிப்பனவாக உள்ளன.

இத்தனை சொல்லிவிட்டு, ரோஜாவின் மருத்துவ குணங்களைச் சொல்லவில்லையென்றால் ரொம்பத்தான் கோபித்துக் கொண்டு விடுகிறார்கள் ஆயுர்வேத, சித்த மருத்துவ நண்பர்கள்

ரோஜாப்பூ குல்கந்து ரொம்ப பிரசித்தம். சீதபேதி, இரத்த விருத்திக்கு வரப்பிரஸாதம் உஷ்ண வயிற்று வலிக்கு ரோஜா மொக்குடன் சதகுப்பை சேர்த்து பக்குவபடுத்திக் கொடுக்க வேண்டுமாம். மலச்சிக்கல், சரும நோய் நிவாரணம் பெறும். “அர்க் பிரகாஷ்” எனும் பழைய சமஸ்க்ருத ஸ்லோகத்தில் ரோஜா பன்னீர் வடிகட்டும் முறைபற்றி பேசப்படுகிறது. ரோஸ் எஸென்ஸ், ரோஸ் சர்பத், ரோஸ் சிரப், ரோஸ் வாட்டர், ரோஸ் தேன் என்று பல தயாரிப்புகள் உலகளாவிய அளவில் சமையலில், கேக் தயாரிப்புகளில் பயன்படுத்தப்படுகின்றன.

மிகப்பெரிய ரோஜா மாலைகளால் தெய்வங்களை அலங்கரிப்பதும், ரோஜாப்பூபாவாடை தைத்து அம்மனுக்கு சார்த்துவதையும் தரிசித்து பூரித்துப்போயிருக்கிறோம். மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள ரோஜா மலர்களை அன்புடன் அர்ச்சித்து தெய்வ அருளைப் பெற்று, சித்தும்பையுடன் பேசுவோம்...

தொடரும்...

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*




- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*

*24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

**48625585 / 9840545585**

## மகாகவி

**“மனதில் உறுதி வேண்டும்**
**நினைவு நல்லது வேண்டும்**
**பெண் விடுதலை வேண்டும்**
**மண் பயனுறவேண்டும்**
**உண்மை நின்றிட வேண்டும்”**

*“வேண்டுவன” என்ற தலைப்பில் பாரதி வேண்டியது. மிக மிக எளிய வரிகளால் அமைந்த இந்த கவிதை என் மனதிற்கு நெருக்கமானது.*

**“பாதகஞ் செய்பவரைக் கண்டால் – நாம்**
**பயங்கொள்ள லாகாது பாப்பா,**
**மோதி மிதித்துவிடு பாப்பா – அவர்**
**முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.**
**துன்பம் நெருங்கிவந்த போதும் – நாம்**
**சோர்ந்துவிட லாகாது பாப்பா,**
**அன்பு மிகுந்ததெய்வ முண்டு – துன்பம்**
**அத்தனையும் போக்கிவிடும் பாப்பா”**

*“பாப்பா பாட்டு” என்ற மிக எளிமையாக குழந்தைகளுக்கு சொல்லிக்கொடுக்கும் பாட்டில் அவன் ஊட்டும் தைரியத்தை இதில் பார்க்கலாம்.*

**“ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்**
**றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற**
**விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.**
**கற்பு நிலையென்று சொல்லவந்தார் இரு**
**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்**
**வற்புறுத் திப்பெண்மைக் கட்டிக்கொடுக்கும்**
**வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்”**

*பாரதி வாழ்ந்த காலத்தில் பெண்ணுரிமையை பற்றி இவ்வளவு ஓங்கி உரைத்தவர் வேறு ஒருவரும் இல்லை.*

**"சென்றதினி மீளாது, மூடரே!**
**நீர் எப்போதும் சென்றதையே சிந்தை செய்து**
**கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமையாதீர்!**
**சென்றதனைக் குறித்தல் வேண்டாம்**
**இன்று புதிதாய்ப்பிறந்தோம் என்று**
**நீவிர் எண்ணமதைத் திண்ணமுறஇசைத்துக் கொண்டு**
**தின்றுவிளையாடியின்புற் றிருந்து வாழ்வீர்;**
**தீமையெலாம் அழிந்துபோம், திரும்பி வாரா"**

*நடந்ததை எண்ணி சோர்ந்து இருக்கும் அனைவரும் இதை திரும்ப திரும்ப வாசிக்க வேண்டும். தீமையெல்லாம் அழிந்து போகும் திரும்பி வாரா என்று அவன் சொல்வது என் கொள்ளுப்பாட்டன் எனக்காக அவன் வேண்டிகொண்டு ஆசீர்வதிப்பது போல தோன்றும்.*

*ஜாதி மத பேதங்களை எல்லாம் கடந்து அணைத்து மக்களுக்கும் எழுதியவன் பாரதி. தான் காணும் கனவு எல்லாம் நிறைவேறும் என்ற உறுதியுடன் பாட்டிசைத்தவன் பாரதி. பாரதியை படிப்பதற்காகவே தமிழ் அறிய வேண்டும். தமிழ் உள்ளவரை பாரதி வாழ்வான்!! முற்றும்.*

**வெ.சிவசங்கரி**


**புதிய கணக்கு எண்**

**வேதபாரதி குருகுலம் ட்ரஸ்ட்**

**வேதபாரதி - வேதவகுப்பிற்கான வங்கி கணக்கு எண்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| Account No | : | 510909010268668<br>Current Account |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank |
| Branch | : | Velachery |

**80G Approved**

# இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

*நாம், நமது சக்தி, பலம் போன்றவைகளை நல்ல, தர்ம காரியங்களுக்காகத் தான் பயன்படுத்த வேண்டும், நல்ல காரியங்கள் செய்யும் போது நமக்கு நாலா புறங்களிலிருந்தும் உதவி கிட்டும் 100 யோஜனை கடலை ஹனுமன் கடக்கும் போது அவருக்கு சோர்வு ஏற்படாமல் இருக்க வாயு பகவான் தனது தென்றல் போன்ற மிதமான காற்றை வீசினார். சூரியன் தனது வெப்பத்தின் தாக்குதலைக் குறைத்துக் கொண்டான். ஹனுமனை எந்த ஆயுதமும் தாக்காது. மேலும் அவர் சிரஞ்சீவி ஹனுமன் கடல் பயணத்திற்கு அடி எடுத்துச் செல்லும்போது மகா விஷ்ணு வாமனனாக அவதரித்து பலிச்சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு அதற்காக தனது காலை எடுத்து வைத்த திரிவிக்கிரமன் போல் இருந்தார்.*

*பொதுவாக நல்ல காரியங்கள் செய்பவர்களுக்கு மூன்று வகையில் இடையூறுகள் வரும். 1. அன்புத்தொல்லை 2.இயற்கை மூலம் வரும் சில சங்கடங்கள் 3. இடையூறு ஏற்படுத்த திட்டமிட்டு நடத்தப்படும் சதி.*

*முதலில் மைனாகம் என்றமலை ஹனுமனை வழிமறித்து சிறிது நேரம் என்மீது அமர்ந்து இளைப்பாறு, பிறகு இங்குள்ள கனி பழங்களை உண்டு போகலாம் என்றது. அதற்கு ஹனுமன் இராம காரியம் முக்கியம். அவசரம் எனக்கு சிறிது நொடி கூட இளைப்பாறஅவகாசம் இல்லை என்று கூறி அந்தக் கனி, மலையைத் தொட்டு வணங்கி மேலே தன் பயணத்தைத் தொடர்ந்தான். நாமும் வாழ்க்கையில் ஏதாவது நல்ல காரியங்கள் செய்யக் கிளம்பினால் முதலில் வீட்டில் உள்ளவர்கள் சில சுப நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு*

போகலாமே என்று வற்புறுத்துவார்கள். இதற்கெல்லாம் முடிவே கிடையாது. எனவே நாமும் நமது கொள்கைகளில் உறுதியாக இருநது காரியங்கள் செய்தால் தான் நம்முடைய இலக்கை எட்ட முடியும். இது ஹனுமன் நமக்கு கற்றுக் கொடுத்த பாடம்.

அடுத்தது சுரஸை என்ற ராட்சஸ வடிவம் ஹனுமனை வழிமறித்து, முதலில் என் வாயில் புகுந்து மேலே பயணத்தை தொடர் என்று கூறியது. ஹனுமன் தன் வடிவத்தைப் பெரிதாக்கிக் கொண்டான். சுரஸையும் அதற்கேற்ப தனது வடிவத்தைப் பெரிதாக்கிக் கொண்டது. சுரஸை வாயினுள் சென்றஹனுமன் தனது உருவத்தைச் சிறியதாக்கிக் கொண்டு வெளியே வந்தான். அப்போது சுரஸையாக வந்த நாகமாதா ஹனுமனிடம் உன்னைச் சோதிக்கவே இப்படிச் செய்தேன். நீ செய்யும் இராம காரியத்திற்கு வெற்றி கிடைக்கும் என்று கூறி வாழ்த்தினாள். நானும் உனக்கு உறுதுணையாக இருப்பேன் என்றான். இது இயற்கை மூலம் வரும் சோதனை. முதலில் பாதகமாக இருந்தாலும், நல்ல காரியம் செய்யும் போது இயற்கை நமக்குச் சாதகமாகத்தான் அமையும் என்பது நியதி.

பிறகு முன்னேறிய ஹனுமனை ஸிம்ஹிகா என்ற பூதம் மேலே செல்ல முடியாதபடி தடுத்தது. அது ஹனுமனின் உருவத்தை பிடித்து இழுத்தது. எனக்கு மிகவும் பசி, இன்று நீ தான் எனக்கு ஆகாரம் என்று கூறி வாயை மிக அகலமாகத் திறந்தது. ஹனுமன் அதன் வாயில் நுழைந்து தனது நகங்கள் மூலம் அதைச் சேதப்படுத்தினான். பூதம் இறந்து விட்டது.

இந்த பூதம் ஹனுமனுக்கு எதிரிதான் அதனால் ஹனுமன் சந்தர்ப்த்திற்கு ஏற்றபடி அறிவுப்பூர்வமாக இந்தப் பிரச்சனையை எதிர்கொண்டு திறமையாக கமாளித்தான். அந்த பூதத்தை அழித்து தனது

பயணத்தை மேலே தொடர்ந்து இலங்கையை அடைந்தான்.

ஒரு குறிக்கோளை எட்ட நாம் அன்பு, இயற்கை, எதிரிகள் மூலம் வரும் தொந்தரவுகளைச் சமாளிக்க வேண்டும். அன்புடன், சகஜமாகவும், நமது அறிவு, சக்தியைக் கொண்டும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டும் என்பது தான் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

பிறகு ஹனுமன் சிறிய உருவம் எடுத்து மாலை வேளை (பகலும், இரவும் சேரும்) சந்தி வேளையில் தனது இடது காலை முன்னெடுத்து நகரில் நுழைந்தான். பகைவர்கள் இடத்திற்குச் செல்லும் போது வலது காலை வைத்து, நேராகச் செல்லக்கூடாது. அப்படி அவன் இடது கால் வைத்துச் செல்லும் போது இலங்கையின் காவல் தெய்வமான இலங்கிணி மடக்கிப் பிடித்துவிட்டாள். ஹனுமனுடன் போரிடத் தலைப்பட்டாள்.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**


# வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விபரம்

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.200

10 வருட சந்தா ரூ.1500

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**

**City Union Bank, Velachery Branch**

**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

**80G Approved**

## தருவின் நிழலில்

## வில்வம் (BAEL, AEGLE MARMELOS - ஏகல் மார்மெலோஸ்



நிலையான சனாதன தர்மத்தில் இறைவழிபாட்டு வழக்க முறையில் வில்ல இலை நிரந்தரமான தவிர்க்க முடியாத பூஜைப் பொருளாகும். ஒன்றிணைந்த பாரததேசமே இதன பூர்வீகம், இன்றைய இந்தியா, இலங்கை, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், மியான்மர் ஆகிய நாடுகள்.

இது இருவித்திலைத் தாவரம், வில்பம், வில்வை, குசாபி, கூவிளம் ஆகிய பெயர்களும் இதற்கு உண்டு. அதேபோன்று மகாவில்வம், கொடி வில்வம், கற்பூர வில்வம், சித்த வில்வம் என்றவெவ்வேறு வகைகளும் வில்வத்தில் உண்டு. தெய்வீக ஆற்றல் நிறைந்துள்ளதால் வில்வ மரத்தை "ஸ்ரீ விருட்சம்" என்றபெயராலும் அழைப்பதுண்டு.

சங்க இலக்கியங்களில் வில்வம் முக்கிய இடம் பெற்றுள்ளது. சங்ககால மகளிர் குவித்து விளையாடிய மலர்களில் "கூவிளம்" எனப்படும் வில்வமும் ஒன்று. சங்க இலக்கியங்களில் ஒன்றான "குறிஞ்சிப் பாட்டில்" (பாடல் எண்.65)

"உரிதுநாறு அவிழ் கொத்து உந்தாழ் கூவிளம்" என்கிறார் கபிலர். கடையேழு வள்ளல்களில் "எழினியின்" அடையாள குடிப்பூவாக கூவிளம் விளங்கிற்று.

தெய்வீக சக்தி கொண்ட வில்வ மரத்தினை

வீடுகளில் வளர்போர்க்கு நரகமில்லை என்பர். ஒரு வில்வ இலையால் இறைவனுக்கு பூஜிக்கும்போது 1000 பேருக்கு அன்னமிட்ட பலனும், கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலனும் கிடைக்கும் என்கிறார்கள் பெரியோர். ஒரு வில்வ இலை ஒரு இலட்சம் தங்க மலருக்கு (ஸ்வர்ண புஷ்பம்) சமமானதாக கூறுகின்றனர்.

த்ரியாயுதம் என்னும் "திரிசூல" வடிவிலும், த்ரிநேத்ரம் என்னும் "முக்கண்" வடிவலும், மூன்று இலைகளுடன், பாபநிவர்த்தி, வியாதி நிவர்த்தி, இறையருள் என்னும் மூன்று குணங்களையுடைய ஒரு வில்வத்தை சிவபெருமானுக்கு அர்பணம் செய்தால், மூன்று ஜென்மங்களில் (முற்பிறவிகளில்) செய்த அனைத்து பாபங்களும் தீரும் என்கிறது பில்வாஷ்டகம் என்னும் மந்திரம்.

"த்ரிதளம் த்ரிகுணாகாரம்
த்ரிநேத்ரம் ச த்ரியாயுதம்
த்ரி ஜென்ம பாப ஸம்ஹாரம்
ஏக பில்வம் ஸிவார்ப்பணம்"

**- ஆதிரையன்**



# வியப்பூட்டும் விருஜ் பூமி யாத்திரை

## மதுரா விருந்தாவனில் ஸ்ரீ ராதாகிருஷ்ணமயம் – 2

**(Dr. ஷ்யாமா ஸ்வாமிநாதன்)**

*ராதே கிருஷ்ணா!* *எல்லாம் இறைசெயல் !*

*விருஜ் பூமி யாத்திரை செல்வது என்பது உறுதியாகிவிட்டது. அன்பர் திரு.பாரதி கணேசன் அவர்கள் முன்பின் தெரியாத எனக்கு, போக வர சென்னை - டில்லி, டில்லி – சென்னை விமானப் பயணத்திற்கு டிக்கட் வாங்கி, வாட்ஸ்அப்பில் அனுப்பிவிட்டார். என் வியப்பு இங்கே ஆரம்பமாகியது. என்ன தைரியத்தில் தொலைபேசியில் பேசி முன்பின் தெரியாத ஒருத்திக்கு, துணிந்து தன் கை காசை செலவழித்துவிட்டார்! இது ஸ்ரீ ராதாகிருஷ்ணரின் மகா கருணை அல்லவா?*

*பாரத தேசத்தின் அதி முக்கிய யாத்திரைகளில் பிரதானமாகக் கருதப்படும்* **விருஜ் பூமி யாத்ரா** *(இதனை இப்போதைய நாளில்* **மதுரா – பிருந்தாவன் யாத்ரா** *என்றுதான் குறிப்பிடுகிறார்கள்) ஆனால் இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் இன்றும் தங்களை* **விருஜ்வாசிகள்** *என்றே சொல்லிக் கொள்கிறார்கள். தாங்கள் வசிக்கும் கிராமங்களை* **விருஜ் பூமி** *என்றே பெருமையுடன் அழைக்கிறார்கள். இந்த பூமி மீது அவர்கள் கொண்டுள்ள பற்றும் பக்தியும் நம்மை வியக்க வைக்கிறது. எனவே நாமும் அவ்வாறே அழைப்போம். அங்கே பயணப்படும் நேரத்தில் அந்த பூமியைப் பற்றிய புனித வரலாற்றுப் பின்னணியைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.*

*சென்னையிலிருந்து விமானத்தின் மூலம் சுமார் இரண்டரை மணி நேரப் பயணம் தலைநகர் டில்லிக்கு, நான் தனி ஒருத்தியாக சென்னை விமான நிலயத்தில்*

முன் சோதனைகளைக் கடந்து, விமானத்தில் ஏறுவதற்கான போர்டிங் பகுதியில் அமர்ந்திருந்தேன். சுற்றி முற்றி பார்த்தேன். இந்த யாத்திரைக்கான யாரையும் காணவில்லை. சற்றேபடபடப்பாக இருந்தது. கையில்நந்தநந்தன் ஸ்ரீ கோபால சம்பு அவர்கள் எழுதிய **"ஸ்ரீமதி ராதா ராணி''** என்கிற புத்தகத்தை வைத்திருந்தேன். மனதை ஒரு முகப்படுத்தி "இனி நீயும் கிருஷ்ணனுமே என்னைக் கைபிடித்து அழைத்துச் செல்ல வேண்டும்" என்று சொல்லிவிட்டு, அதற்குள் ஏற்கனவே படிக்க ஆரம்பித்து அடையாளம் வைக்கப்பட்டிருந்த பக்கத்தைப் புரட்டினேன். **ஸ்ரீ ராதா கல்யாணம்** என்றதலைப்பின் அருகே ஸ்ரீ கிருஷ்ணனே விவரித்தது என்று குறித்து வைத்திருந்தேன். (பக்கம் – 39) அதனைப் படிக்க ஆரம்பித்தேன். அதன் முதல் பாரா வரிகளை நான் அப்படியே தருகிறேன்.

**"சக்ர என்று பிரசித்தி பெற்ற ஸ்ரீ சுதர்சன் சிங் தன்னுடைய நந்த நந்தன் நூலில் (தமிழில் நந்தலாலா) ஸ்ரீ ராதா கல்யாணத்தை ஸ்ரீ கிருஷ்ணனே கூறுவது போல் அனுபவித்தார்" என்று தொடங்குகிறது.**

இதனைத் தொடர்ந்த ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே தன் மனம் திறந்து சொல்வது போல் எழுதப்பட்டுள்ள விவரங்கள் ஸ்ரீ ராதா கிருஷ்ண பக்தர்களுக்கு தேவாமிர்தமாகவே இருக்கும். ஆனந்தக் கண்ணீருடன், ரசித்துப் படிப்பார்கள் என்று எனக்குப் புரிந்தது. ஏனென்றால் நானும் விமான நிலையத்தின், சூழ்நிலை மறந்து அப்படித்தான் இருந்தேன். மிக அருகே "நமஸ்காரம் மாமி" என்று ஒரு இனிய குரல் கேட்கவே, தலை நிமிருந்து பார்த்தேன். நெற்றியில் கோபிசந்தனத்துடன், நவீனமாக சிறு சிகை வைத்துக் கொண்ட பளிச்சென்ற தோற்றத்துடன் ஒருவர், கைகளைக் குவித்த வண்ணம் நின்றுகொண்டிருந்தார்.

நான் எழுந்து சுதாரிக்கும் முன், “நான் பாரதி கணேசன், இது என் மனைவி சரஸ்வதி. இனி உங்கள் யாத்ரா சகி. நீங்கள் தான் டாக்டர். ஷ்யாமா என்று யூகித்துவிட்டேன்” என்ற ஸ்ரீ ராதா கிருஷ்ண பக்த தம்பதிகளைப் பார்த்ததும், சாக்ஷாத் ஸ்ரீராதையும் கிருஷ்ணனும், என்னைத் தங்கள் ஜென்ம பூமியான விருஜ்பூமிக்கு அழைத்துச் செல்லவந்துவிட்டார்கள் என்று புரிந்து கொண்டேன். பரஸ்பர அறிமுகத்திற்குப் பிறகு, நாங்கள், ஸ்ரீ ராதா கிருஷ்ண பிரேமிகளாக ஐக்கியமாகிப் போனோம். விருஜ்பூமி புண்ணிய யாத்திரை இனிதே ஆரம்பமாகிறது.

விஸ்தாரா விமானம் வசதியாக இருந்தது. எங்கள் இருக்கைகள் சற்று முன்பின் இருந்தன. நான் மீண்டும் ஸ்ரீமதிராதா ராணியில் மூழ்கிப்போனேன். படிக்கப்படிக்க பரவசம். ஏன் இந்த விருஜ்வாசிகள், ஸ்ரீ ராதா கிருஷ்ணர் மீது இவ்வளவு தீவிர பக்தர்களாக இருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ள முயற்சித்தேன். ஆனால் அது பெருங்கடல்! இதில் மூழ்கி முத்தெடுக்கும் அளவிற்கு, எனக்கு ஞானம் இல்லை. ஸ்ரீராதா கிருஷ்ண தொடர்பான இடங்களாகக் கருதப்படும் மதுரா, விருந்தாவன், கோகுலம், ஆயர்பாடி, ராவல், நந்தகாம், பர்சானா, கோவர்தன் மலை ஆகிய பிரதேசங்களை விருஜ்பூமி என்றும் விருஜ்தாம் என்றும் சொல்கிறார்கள். இங்கே வசிக்கும் மக்கள் தங்களை விருஜ்வாசிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இவர்கள் பேசும் மொழி விருஜ் பாஷா என்றும் பிராச் எனவும் சொல்லப்படுகிறது. விருஜ் எனும் ஸம்ஸ்க்ருத வார்த்தைக்கு இடையர்கள் மாடு மேய்க்கும் இடம் என்றும் பொருளாம். இத்தகைய பூமியில் ஸ்ரீ ராதாவும் ஸ்ரீ கிருஷ்ணரும் பிறந்து, வளர்ந்து, ஓடி விளையாடிப் பல லீலைகள் புரிந்த புண்ணிய பூமி என்பதே மகத்துவம்.

*பாரததேசத்தின் தலைநகரான புதுடில்லி விமான நிலையத்தில் வந்து இறங்கிவிட்டோம். மேலும் பல யாத்ரீகர்கள் வேறு சில விமானங்கள் மூலமாகவும் ரயில் பயணம் மூலமாகவும் அக்டோபர் 14-ம் தேதி, காலை 9.00 மணிக்குள் விருந்தாவனில், ப்ரியகாந்த் ஜு மந்திர் வளாகத்தில், யாத்ரீகர்கள் தங்குவதற்கென்றே அமைக்கப்பட்டுள்ள, தங்கும் விடுதியான ஷாந்தி சேவா தாம் எனும் இடத்தில் சந்திக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தோம். நாங்கள் முதல் நாள் (13-ம் தேதி) மதியமே டில்லி வந்தடைந்துவிட்டோம். இனி, இங்கிருந்து விருந்தாவன் நோக்கி, சாலை வழியாக சுமார் நான்குமணி நேரம் பயணப்பட வேண்டும். அதற்கான வாகன ஏற்பாட்டையும் முன்கூட்டியே பாரதி கணேசன் செய்திருந்தார் டில்லி விமான நிலையத்தில், யோகமுத்திரைகளை வித்தியாசமான பின்னணியில் மிக அழகாக வடிவமைத்திருந்தார்கள். புகைப்படங்களை எடுத்துக்கொண்டு, வெளியே வந்துசாலைப் பயணத்தைத் தொடர்ந்தோம். மதுராவில், ஒரு சிற்றுண்டி சாலையில் நிறுத்தி அருமையான, மட்கா மசாலா தேனீரும் பனீர், காய்கறி பக்கோடாவும் சாப்பிட்டுவிட்டு, தெம்புடன் மேலும் பயணித்து, விருந்தாவன் வந்து ஷாந்திதாம் தங்கும் விடுதியைப் பார்த்ததும் பிரமித்துவிட்டோம். அருமையான கட்டமைப்பு, அதுவும் லோட்டஸ் மந்திர் என்று அழைக்கப்பட்ட "ப்ரிய காந்த் ஜு மந்திர்" மிகப்பெரிய தாமரைப் பூ மீது கட்டப்பட்டிருந்தது. வெளிப்புறதோற்றமே மனதைக் கொள்ளை கொண்டது.*

*விருந்தாவன ஸ்வாஸமும் ஸ்பரிசமும் நெஞ்சம் நிறைந்தது.*


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

## புதுவையில் "ராதா கல்யாணம்"

*புதுச்சேரியில் வேதபாரதி தொடங்கப்பட்டது முதல் பிரதி வருடம் மார்கழி மாத வீதி பஜனை, புதுவையின் நகர் மற்றும் கிராமப்புறங்களில், தினம் ஒரு பகுதியாக நடைபெற்று வருகிறது. இந்த மார்கழி பஜனையின் நிறைவு மற்றும் சிறப்பு விழாவாக ராதா மாதவ விவாஹ வைபவமும் நடைபெறுகிறது.*

*மூன்றாவது ஆண்டு ராதா கல்யாண வைபவம் கடந்த ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய தினங்களில் நடைபெற்றது. கடையநல்லூர் ப்ரம்மஸ்ரீ ராஜகோபால்தாஸ் பாகவதர் குழுவினரால் நடைபெற்ற இந்த வைபவத்தின் முதல் நாள் காலை விக்நேஸ்வர பூஜை, சங்கல்பம், கடந்த ஐந்தாண்டு காலமாக இடைவிடாது தொடர்ந்து பாராயணம் செய்துவரும் புதுவை வேதபாரதி பாராயணக் குழுவினரின் வேதபாராயணம் ஆகிய நிகழ்ச்சிகளோடு "அஷ்டபதி பஜனை" சம்ப்ரதாய முறைப்படி துவங்கியது. பிற்பகல் வரை நடைபெற்ற அஷ்டபதி பஜனையை தொடர்ந்து, மாலை 5 மணியளவில் "விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணமும்" நடைபெற்றது.*

*மாலை 6.00 மணியளவில் அருகிலுள்ள அம்பாள் திருக்கோவிலில் இருந்து அலங்கரிக்கப்பட்ட ராதா கிருஷ்ணர் ஸ்வாமிகளுடன் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட சீர்வரிசை தட்டுகளை ஏந்தி சக்திகள் புடைசூழ வெகு விமரிசையான மாப்பிள்ளை அழைப்பு நாதஸ்வர தவில் கச்சேரியுடன் திருமண மண்டபத்தை அடைந்தது.*

*இரவு 8 மணியளவில் தொடங்கிய திவ்யநாம பஜனை நள்ளிரவு கடந்தும் நடைபெற்றது. காலை முதல் நடைபெற்றசம்ப்ரதாய பஜனையை*

ஒவ்வொருவரும் நாவசைத்து பாகவதருடன் பாடிய காட்சி, அவர்கள், தொய்வில்லாமல் மார்கழி வீதி பஜனையில் ஒவ்வொரு நாளும் கலந்து கொண்டதை பறைசாற்றியது மட்டுமின்றி, காலை முதல் மண்டபத்திலிருந்து அகலாமல் பஜனையின் நாம ருசியை அனுபவித்தவர்கள், களைப்பறியாது இரவு திவ்ய நாம பஜனையிலும் கலந்துகொண்டு ராதா மற்றும் கிருஷ்ணரின் ராகத்திற்கேற்ப நடனம் ஆடியவையெல்லாம் கண் கொள்ளாக் காட்சிகளாகும். மிகப்பெரிய குளு குளு மண்டபமான ஜெயராம் கல்யாண மண்டபத்தில் அகலாது நிறைந்திருந்த பக்த ஜனங்களை கண்ட ஸ்ரீ பாகவதர், நள்ளிரவு கடந்தும் திவ்ய நாமத்தை முடிப்பதற்கு மனமின்றி தவித்ததை காண முடிந்தது.

இரண்டாவது நாள் ஜனவரி 12 ஞாயிறன்று காலை வழக்கமான தனுர் மாத பஜனை மண்டபத்திலே நடைபெற்றது. பிறகு உஞ்சவ்ருத்தி தொடர்ந்து கல்யாண அஷ்டபதியுடன் “ராதா மாதவ விவாஹ வைபவம்” தொடங்கியது. புதுச்சேரியில் “வேதபாரதி மேட்ரிமோனி” சேவை கடந்த ஆறாண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதில் பதிவு செய்யப்பட்டு பலரது இல்லங்களில் கெட்டிமேளம் கொட்டியுள்ளது.

அவ்வாறு, பதிவு செய்யப்படும் ஜாதகங்கள் ராதா கல்யாண வைபவ நிகழ்ச்சியில் சங்கல்பம் செய்து வைக்கப்பட்டு செய்த பிரார்த்தனையின் பலனாக கடந்த இரண்டாண்டுகளில் ஒரு தொகையான திருமணங்கள் நடைபெற்றுள்ளன. அதன் தாக்கத்தின் காரணமோ, இந்தாண்டு ராதா மாதவ விவாஹ வைபவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஜாதகங்கள் வைத்து மக்களால் பிரார்த்தனை செய்யப்பட்டது.

முக்கியஸ்தர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்த இந்த வைபவத்தில் இரு நாட்களும் அரங்கு நிறைந்து பெருமளவில் கூட்டமாக பக்தர்கள் கலந்து கொண்டு பகவானின் பேரருள் பெற்றனர். இரண்டு நாட்களும் கலந்து கொண்ட அத்துணை பேருக்கும் ஒவ்வொரு வேளையும் கல்யாண சாப்பாடு சிறப்பாக குறைவின்றி பரிமாறப்பட்டது. இரு நாட்களும் டைனிங் ஹாலில் அன்னபூரணி பூரணமாக அவதாரமாகியிருந்தாள்.

எப்போதும், சத்கார்யங்களில் ஈடுபட்டு சமூகப் பணியாற்றுபவர்களை வேதபாரதி மறப்பதில்லை. அப்படியே, இவ்வருடம் அரங்கு நிறைந்த சபையில் நோய்வாய்பட்டிருக்கும், புதுவையில் வேதபாரதி தொடங்கப்பட்ட நாளிலிருந்து மார்கழி பஜனையில் வழிநடத்திய ஸ்ரீமான், சத்தியமூர்த்தி பாகவதருக்காக கூட்டு பிரார்த்தனை செய்யப்பட்டது.

அதேபோல, ஸ்ரீமதி.மீனாட்சி பாட்டி (புதுவை வேதபாரதி துணைத்தலைவர் திரு.வேதராமன் தாயள்), மடிப்பாக்கம் சுரேஷ் பாகவதர் மற்றும் வேதபாரதியின் அனைத்து சத்கார்யங்களுக்கும் வெளிச்சம்படாத வேராக உதவிக்கரம் நீட்டும் சென்னை பிரபல அட்வகேட் ஸ்ரீமதி. உமாமகேஸ்வரி ஆகியோருக்காக ச்ரத்தாஞ்சலி செய்யப்பட்டது. இரு நாட்களிலும் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட “ராதா மாதவ விவாஹ வைபவம்” சிறப்பாக நிறைவுற்றது.

- ஆதிரையன்.

# விரைவில் புதிய ஸ்லோக வகுப்புகள்

## கோரகஷ்ட நிவாரண ஸ்தோத்ரம்

**ஸ்ரீ ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் அருளியது.**

*பூஜ்யஸ்ரீ நெரூர் ஸ்ரீ வித்யா ஸங்கர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளாசியுடன் ஆரம்பம்*

*ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன், மதுரை*

*ஸ்ரீமதி. நீலா முரளிதரன், மதுரை*



||Shri Chowdeshwari Prasanna||

**SHREE SHANKARA THAPOVANAM**

**(Shree Chandramouleswara Seva & Trust)**

Plot No.596, VGP Jayanagar, Onnalavadi, Thorapalli Panchayat, Rayakotta Road, HOSUR – 635126.

**MONTHLY SEVA**

1. Pradosha Pooja
2. Shukla Panchami Pooja
3. Ashlesha Abhishekam
4. Sankasthahara Chatrurthi
5. Go Pooja on Fridays

**GAU POSHANA SEVA**

1 Cow feeding for day rs.145/-
10 cows for day Rs.1,450/-
1 Cow for month Rs.4350/-
10 Cows for month Rs.43,500/-



**Life Time One day Pooja for Every year (Life Membership) Rs.5001/-**



*Devotees are requesting to contribute for Gou Seva*

**For Online Payments**

A/c Shree Chandramouleswara Seva & Trust, Inidan Bank,
A/c No.6189034010 IFSC Code : IDIB000B142
Branch : Hosur

ஹரி ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

**வேதபாரதி**

**யோகா வகுப்புகள் (30 நிமிடங்கள்)**

**வாரம் 2 நாட்கள் by Online**

செவ்வாய், வியாழன் – காலை 6.00 மணி
சனி, ஞாயிறு – காலை 6.00 மணி

ஆசிரியர் : யோகாச்சாரியார் **ஸ்ரீ J. சந்திரசேகர் ஜி**
திருச்சி

யோகாவில் இணைவோம் உடல் மனம் புத்துணர்ச்சி பெறுவோம்

தொடர்புக்கு :
**9443495950 / 9443453053**

**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும்**
**ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**
சிறியவர்களுக்கு ஸ்ரீ குரு பாதுகா ஸ்தோத்திரம்
பெரியவர்களுக்கு ஸ்ரீ வேங்கடேச கராவலம்பம்

ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,
ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை

தொடர்புக்கு : **9443489129**

## கோடீ காயத்ரீ ஜப யக்ஞம் – சேலம்

*26.01.2025 அன்று கோடீ காயத்ரீ ஜப யக்ஞம் ஸ்ரீ காஞ்சி காமகோடி காமாட்சி கோவில் சன்னதியில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. வேதபாரதியின் வேதவகுப்பு அத்தியாபகர் (VB7) ஸ்ரீ ராஜா கனபாடிகள், டாக்டர் ஸ்ரீதர் பொறுப்பெடுத்து சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். முதல் நாள் 25-ம் தேதி காலை முதல் வேதபாரதி நிர்வாகிகள் ஸ்ரீராமகிருஷ்ணன், ஸ்ரீமதி வித்யா, ஸ்ரீ சங்கர், ஸ்ரீ ரகுநாத் மாமா, ஒசூர் ஸ்ரீ பாபு ஷர்மா, கரூர் S.G. சங்கர், ஸ்ரீ அனந்த கிருஷ்ணன் ஆகியோர் முன்னேற்பாடு பணிகளை மிகுந்த சிரத்தையுடம் ஏற்பாடு செய்து கொடுத்தனர். மறுநாள் 26.01.2025 அன்று காலை 6.00 மணிமுதல் பூர்வாங்க பூஜைகள், கோபூஜை, கணபதி ஹோமம், காயத்ரீ மாதா பூஜை, காயத்ரீ ஹோம சங்கல்பம் நடைபெற்றது. காலை 7.30 மணிக்கு ஆறு ஹோம குண்டங்களுக்கும் ரித்விக்குகள் ஸ்ரீ ராஜா குருஜி மற்றும் சேலம் ஸ்ரீ சீனிவாஸ ஸாஸ்திரிகள் வழிகாட்டுதலில் ஹோமங்கள் நடைபெற்றது. வேதவகுப்பு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ மங்காலிங்கம் மந்திர உச்சாடனம் செய்தார்கள். 10.30 மணிக்கு ஹோமம் பூர்த்தியின் போது ஒசூர் பூஜ்யஸ்ரீ குகைஓம் ஸ்வாமிகள் எழுந்தருளச் செய்தார்கள். பூர்ண கும்ப மரியாதையுடன் ஸ்வாமிகளுக்கு வேதபாரதி நிர்வாகிகள் வரவேற்பு கொடுத்தார்கள். ஸ்வாமிகள் ஆசியுரைக்குப்பின் எல்லோருக்கும் ஆச்சாரமான உணவு வழங்கப்பட்டது. சேலம் மறவனேரி மற்றும் அதன் பகுதியிலுள்ள பிராமண சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ரித்விக்குகள் தங்குவதற்கு காஞ்சி ஸ்ரீ காமாட்சி கல்யாண மண்டபம் அறங்காவலர்கள் மிகுந்த ஒத்துழைப்பு நல்கினார்கள்.*

## கும்பகோணம் – யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

**நாள் : 05.01.2025, ஞாயிறு**

வேதபாரதியின் பெண் குழந்தைகளுக்கான பெண்மையை போற்றுவோம், யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம் ஸ்ரீ பாலாஜி மஹால், கும்பகோணத்தில் நடைபெற்றது. முதல் நாள் ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ குருமூர்த்தி மாமா மற்றும் கும்பகோணம் வேதபாரதி அன்பர்கள் முன்னேற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்கள்.

மறுநாள் காலை 8.00 மணி முதல் அந்தண பெண் குழந்தைகள் நிகழ்ச்சிக்கு குடும்பத்துடன் வர ஆரம்பித்தார்கள். காலை உணவிற்குபின் 9.00 மணி முதல் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் துவங்கின. 10.30 மணி முதல் 1.00 மணி வரையில் குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் கலந்தாய்வு நிகழ்ச்சி நடைபெற்றது. மதிய உணவிற்கு பின் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்குமான கேள்வி, பதில் நிகழ்ச்சியும், இந்நிகழ்ச்சி பற்றிய குழந்தைகளின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டது.

மாலை 4.00 மணி முதல் 5.00 மணி வரை முசிறி தீக்ஷிதர் அவர்களின் சிறப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருச்சி சந்திரசேகர் மற்றும் வேதபாரதியின் யுவஸ்ரீக்கள் செல்வி.மதுரிமா, செல்வி.சுபஸ்ரீ, செல்வி. சுஷ்மிதா, செல்வி.புஷ்கரா கலந்துகொண்டு குழந்தைகளுக்கு தற்போதைய வாழ்வியல் குறித்த வகுப்பு நடத்தினார்கள்.

கும்பகோணத்தில் உள்ள வேதபாரதி குழுவினர் 80க்கும் மேற்பட்ட குழந்தைகளை ஒருங்கிணைத்தது வேதபாரதியின் அடுத்த மைல்கல் ஆகும். மனமார்ந்த பாராட்டுக்கள்.

# ANATHA PRETHA KAINKARYA TRUST

# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.**

**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**

**Email : dharmaa.apkt@gmail.com   Website : www.dharmaa.org**

## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*


*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple-seamless-secure
DRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26 
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th February 2025

மரம் வளர்ப்போம் இயற்கையை காப்போம்



நம் தலைமுறை நம்மை போற்றட்டும்




To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.